بسم الله الرحمن الرحيم　　نحمده ونصلي على رسوله الكريم　　وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 4

இதழ் 39

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

26 முஹர்ரம் 1441 ஹிஜ்ரி கமரி 26 தபூக் 1398 தப்லீக் ஹிஜ்ரி ஷம்ஸி
26 செப்டம்பர் 2019

**அல்லாஹ்வின் கட்டளை**

اَلَّذِيْنَ يُنْفِقُوْنَ فِى السَّرَّآءِ وَالضَّرَّآءِ وَالْكٰظِمِيْنَ الْغَيْظَ وَالْعَافِيْنَ عَنِ النَّاسِ ؕ وَاللّٰهُ يُحِبُّ الْمُحْسِنِيْنَ ○

(இறையச்சமுடைய) இவர்கள் செல்வ நிலையிலும், வறிய நிலையிலும் (இறைவனுடைய வழியிலே) செலவு செய்கின்றனர். மேலும், (அவர்கள்) கோபத்தை அடக்குபவர்களும், மக்களை மன்னிப்பவர்களுமாவர். அல்லாஹ் நன்மை செய்பவர்களை நேசிக்கின்றான் (3:135)

**அஹ்மதிய்யா செய்திகள்**

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**திருக்குர்ஆன் மற்றும் தவ்ராத்திற்கிடையில் கண்டிப்பாக ஒரு ஒப்புமை இருக்கின்றது என்பதை நாம் ஒருபோதும் மறுக்கவில்லை. ஆனால் சொற்றொடரை மட்டும் அது எடுத்துள்ளது. அத்துடன் அத்தாட்சி சான்றுகள் மற்றும் விளக்கங்கள் இல்லை**

**நான் உங்களுக்கு கூறுகின்றேன். அதாவது, எல்லாம் வல்ல அல்லாஹ்வின் ஆற்றல்கள் மற்றும் அவனுடைய திட்டங்கள் எவராலும் கணக்கிட முடியாது. எந்த மனிதனாவது அவ்வாறு செய்வதாக வாதம் செய்தால் அவர் இறை மறுப்பாளர் ஆவார்**

**இமாம் ஃபக்ருத்தீன் ராஸி அவர்களின் இந்தக் கூற்று மிகவும் சரியானதாகும். அதாவது எவர் எல்லாம் வல்ல இறைவனை அறிவின் அளவுகோலைக் கொண்டு கணக்கிட நினைப்பாரோ அவர் மூடர் ஆவார்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

### தவ்ராத்திற்குப் பிறகு திருக்குர்ஆனின் அவசியம்

தவ்ராத்தில் என்ன உள்ளதோ அதைத்தானே திருக்குர்ஆனும் கொண்டு வந்துள்ளது என சிலர் கேட்கின்றனர். இந்த குறைமதி பார்வையினால்தான் சில கிறிஸ்தவர்கள் திருக்குர்ஆனைப் போன்ற பல புத்தங்களை எழுதுவதற்கு தைரியத்தை வெளிப்படுத்தினார்கள். அவர்கள் அந்த உண்மையான ஞானம் மற்றும் உண்மையான புரியும் திறனைக் கொண்டு செயல்பட்டிருந்தால் அவர்கள் வழிதவறியிருக்க மாட்டார்கள்.

இப்படிப்பட்ட மக்கள் கூறுகின்றார்கள். அதாவது தவ்ராத்தில் நீங்கள் விபச்சாரம் செய்யாதீர்கள் என்று எழுதப்பட்டுள்ளது. அவ்வாறே திருக்குர்ஆனிலும் விபச்சாரம் செய்யாதீர்கள் என்று எழுதப்பட்டுள்ளது. திருக்குர்ஆன் ஏகத்துவத்தைக் கூறுகிறது. அவ்வாறே தவ்ராத்தும் ஏகத்துவத்தை அதாவது ஒரே இறைவனை வணங்க வேண்டும் என கூறுகிறது.

ஆனால் இரண்டிற்கும் உள்ள வேறுபாடு என்ன? வெளிப்படையில் இது பெரிய சிக்கலான கேள்வியாகும். எதுவும் தெரியாத நபருக்கு முன்னால் இந்தக் கேள்வியை எடுத்து வைத்தால் அவர் பதற்றம் அடைந்து விடுவார்.

உண்மை என்னவென்றால், இதுபோன்ற நுட்பமான மற்றும் சிக்கலான கேள்விக்கான தீர்வும் அல்லாஹ்வின் சிறப்பான அருளின்றி சாத்தியமில்லை. அந்தந்த நேரத்தில் வெளிப்படுத்தக்கூடிய திருக்குர்ஆனின் ஆழிய ஞானம் இதுவேயாகும்.

உண்மை என்னவென்றால், திருக்குர்ஆன் மற்றும் தவ்ராத்திற்கிடையில் கண்டிப்பாக ஒரு ஒப்புமை இருக்கின்றது என்பதை நாம் ஒருபோதும் மறுக்கவில்லை. ஆனால் சொற்றொடரை மட்டும் அது எடுத்துள்ளது. அத்துடன் அத்தாட்சி சான்றுகள் மற்றும் விளக்கங்கள் இல்லை. ஆனால் திருக்குர்ஆனோ அறிவுடைமையை கைக்கொண்டுள்ளது. அதனால்தான் தவ்ராத்துடைய காலத்தில் மனிதர்களுடைய நிலைமை விலங்குகள் போல் இருந்தது. ஆகவே திருக்குர்ஆன் இறைவணக்கங்களின் பயன்கள் மற்றும் நற்பண்புகளின் பலன்களையும் வெளிப்படுத்தக்கூடிய வழிமுறைகளை மேற்கொண்டது. மேலும் பயன்கள் மற்றும் பலன்களை மட்டும் எடுத்துக் கூறவில்லை.

மாறாக, அறிவு ஏற்றுக் கொள்ளக்கூடிய அத்தாட்சிகளையும் ஆதாரங்களையும் அது எடுத்து வைத்தது. அதன் மூலம் அறிவுடன் செயல்படுபவர்களுக்கு நிராகரிப்பதற்கான எந்த சந்தர்ப்பமும் அளிக்கக் கூடாது என்பதே அதன் நோக்கமாகும். நான் தற்போது கூறியது போன்றே அதாவது திருக்குர்ஆனுடைய காலகட்டத்தில் மனிதர்களின் புரியும் தன்மை முதிர்ச்சியை அடைந்து விட்டது.

தவ்ராத் இறக்கப்பட்ட காலகட்டத்தில் அவர்களுடைய நிலைமை விலங்குகள் போல் இருந்தது. ஆதம் (அலை) அவர்களுடைய காலகட்டத்திலிருந்து உலகம் முன்னேறிக் கொண்டே சென்றது. மேலும் திருக்குர்ஆனுடைய காலகட்டத்தில் வட்டத்தைப் போன்று முழுமை அடைந்தது. ஹதீஸில் வருகிறது: உலகம் ஒரு உருண்டை வடிவமாக ஆகி விட்டது.

அல்லாஹ் கூறுகின்றான்:

مَا كَانَ مُحَمَّدٌ اَبَآ اَحَدٍ مِّنْ رِّجَالِكُمْ وَلٰكِنْ رَّسُوْلَ اللّٰهِ وَخَاتَمَ النَّبِيّٖنَ

முஹம்மது உங்களுள் எந்த ஆணுக்கும் தந்தை இல்லை. ஆனால் (அவர்) அல்லாஹ்வின் தூதராகவும், நபிமார்களுக்கெல்லாம் கா(த்)தம் ஆகவும் விளங்குகின்றார். (33:41)

தேவைகள் நபித்துவத்தின் மையமாக இருக்கின்றது. இருள் சூழ்ந்த இரவுகள் உலகை இருளிலிருந்து இரட்சிப்பு பெறச்

*(தொடர்ச்சி 11 ஆம் பக்கம்...)*

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**இறையச்சத்தை அடிப்படையாகக் கொண்டு கட்டப்படும் பள்ளியே உண்மையான பள்ளிவாசலாகும்**

**நமது பள்ளிவாசல்கள் எப்போதும் இறையச்சத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருப்பதற்கு நாம் எப்போதும் முயற்சி செய்து வர வேண்டும்**

**கலப்பற்ற மற்றும் விசுவாசமிக்க மற்றும் பத்ர் போரில் கலந்து கொண்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபாக்களான ஹஸ்ரத் ஆஸிம் பின் அதீ (ரலி), ஹஸ்ரத் உமர் பின் அவ்ஃப் (ரலி), ஹஸ்ரத் மஅன் பின் அதீ (ரலி) ஆகியோர்களின் வாழ்க்கையிலிருந்து ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய சம்பவங்கள்**

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸிரார் பள்ளிவாசலை இடிப்பதற்காக வழங்கிய கட்டளை மற்றும் அதன் பின்னணி**

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் கலீஃபாவாக தேர்ந்தெடுக்கப்பட்ட சம்பவம் தொடர்பான முழுமையான விவரம்**

**அல்லாஹ் ஒவ்வொரு அஹ்மதிக்கும் நபித்துவத்தின் அந்தஸ்தை புரிந்து கொள்வதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக. மேலும் கிலாஃபத்துடன் நன்றியுணர்வுடனும், பற்றுணர்வுடனும் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **லண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 23 ஆகஸ்ட் 2019** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1398 -ஆம் ஆண்டு **ஸஹுர்** மாதம் **23 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

பத்ரி சஹாபாக்களின் குறிப்பில் இன்று நான் எடுத்துக் கூற இருக்கின்ற சஹாபியின் பெயர் ஹஸ்ரத் ஆஸிம் பின் அதீ (ரலி) ஆவார்கள். அன்னாரின் தந்தையின் பெயர் அதீ ஆகும். அன்னார் பனு அஜ்லான் பின் ஹாரிஸாவின் கோத்திரத்தைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். இது பனூ ஸைது பின் மாலிக்கின் நட்புக் கோத்திரமாகும். ஹஸ்ரத் ஆஸிம் அவர்கள் பனூ அஜ்லான் கோத்திரத்தின் தலைவரான ஹஸ்ரத் உஸ்மான் பின் அதீ அவர்களின் சகோதரர் ஆவார்கள்.

அன்னாரது சுட்டுப் பெயர் அபூபக்ர் என்று கூறப்படுகிறது. வேறு சிலர் அன்னாரது சுட்டுப் பெயர் அபூ அப்துல்லாஹ், அபூ உமர், அபூ அமர் என்றும் கூறுகின்றனர். அன்னார் நடுத்தர உயரத்தை கொண்டவராக திகழ்ந்தார்கள். மேலும் தலை முடிகளில் மெஹந்தி போடக் கூடியவராக இருந்தார்கள். அன்னாரது மகனின் பெயர் அபுல் பத்தாஹ் ஆகும்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 354–355 ஆஸிம் பின் அதீ – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 111 ஆஸிம் பின் அதீ – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அன்னாரது மகளின் பெயர் சஹ்லா ஆகும். இவர்களது திருமணம் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்களுடன் நடைபெற்றது. இந்த திருமணம் மூலமாக இவர்களுக்கு நான்கு குழந்தைகள் இருந்தனர். அதில் மூன்று ஆண் குழந்தைகள் ஆவர். மஅன், உமர், ஸைது ஆகியோரும் அம்மத்துர ரஹ்மான் சுக்ரா என்ற மகளும் ஆவர்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பத்ர் போருக்காக சென்றபோது ஹஸ்ரத் ஆஸிம் பின் அதீ அவர்களை கபா மற்றும் மதீனாவின் அருகிலுள்ள ஆலிய்யா என்ற இடத்திற்கு அமீராக நியமித்தார்கள்.

ஓர் அறிவிப்பில் இதுவும் வருகின்றது. ரவ்ஹா என்ற இடத்தில் இருந்த போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆலிய்யா என்ற இடத்திற்கு அன்னாரை அமீராக நியமித்து திருப்பி அனுப்பினார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஆஸிம் அவர்களை திருப்பி அனுப்பினார்கள். ஆனால் அன்னாரை பத்ர் போர் சஹாபாக்களில் இணைத்தார்கள். மேலும் போரில் கிடைத்த செல்வத்தில் அன்னாருக்கும் பங்கை நிர்ணயித்தார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 355 ஆஸிம் பின் அதீ – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அல் அஸாபா ஃபீ தமீஸுஸ் சஹாபா தொகுதி 3 பக்கம் 463 ஆஸிம் பின் அதீ – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் இந்த சம்பவம் தொடர்பாக இவ்வாறு எழுதியுள்ளார்கள்: அதாவது மதீனாவிலிருந்து வெளியேறியபோது பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உம்மே மக்தூம் அவர்களை மதீனாவின் அமீராக நியமித்திருந்தார்கள். ஆனால் அன்னார் மதீனாவிலிருந்து 36 மைல் தொலைவிலுள்ள ரவ்ஹா என்ற இடத்தை அடைந்ததும், அப்துல்லாஹ் பார்வையற்ற நபராவார். மேலும் குரைஷிகளின் படையும் வந்து கொண்டிருக்கிறது.

மேலும் தமக்குப் பின்னால் மதீனாவின் ஏற்பாடுகளும் சரியாக இருக்க வேண்டும் என்பதை உணர்ந்த பெருமானார் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் அபூ லுபாபா பின் முன்ஸிர் அவர்களை மதீனாவின் அமீராக நியமித்து திருப்பி அனுப்பினார்கள். மேலும் அப்துல்லாஹ் பின் மக்தூம் அவர்கள் தொடர்பாக அன்னார் இவ்வாறு கட்டளை பிறப்பித்தார்கள். அதாவது அவர்கள் இமாமுஸ் சலாத்தாக மட்டுமே செயல்படுவார்கள். ஆனால் அமைப்பு தொடர்பான பணிகளை ஹஸ்ரத் அபூ லுபாபா அவர்கள் மேற்கொள்வார். மேலும் குபா என்ற பகுதிக்கு அன்னார் ஹஸ்ரத் ஆஸிம் பின் அதீ அவர்களை அமீராக நியமித்தார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 354)

ஹஸ்ரத் ஆஸிம் அவர்கள் உஹது, அகழ் போர் உட்பட அனைத்துப் போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள். அன்னார் ஹிஜ்ரி 45 ஆம் ஆண்டு அமீர் முஆவிய்யா அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் வஃபாத்தானார்கள். அப்போது அன்னாரது வயது 115 ஆகும். மேலும் சிலர் அன்னார் 120 வது வயதில் வஃபாத்தானார்கள் என்று கருதுகின்றனர்.

ஹஸ்ரத் ஆஸிம் அவர்கள் மரணமடையவிருந்த தருணத்தில் அவர்களது வீட்டிலுள்ளவர்கள் அழத் தொடங்கினர். அதற்கு அவர்கள், எனக்காக அழாதீர்கள். ஏனென்றால் நான் நீண்ட ஆயுளை கழித்து விட்டேன் என்று கூறினார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 355 ஆஸிம் பின் அதீ – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அல் அஸாபா ஃபீ தமீஸுஸ் சஹாபா தொகுதி 3 பக்கம் 464 ஆஸிம் பின் அதீ – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

பெருமானார் (ஸல்) அவர்கள் தபூக் போருக்காக ஆயத்தமாகுமாறு சஹாபாக்களுக்கு கட்டளையிட்டவாறு செல்வந்தர்களிடம், அல்லாஹ்வின் வழியில் செல்வங்களையும், பயணத்திற்கான ஏற்பாடுகளையும் தியாகம் செய்யுமாறு கூறினார்கள். அப்போது பல்வேறு மக்களும் தத்தமது தகுதிக்கேற்ப தியாகங்கள் செய்தனர். அந்த சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தமது வீட்டிலுள்ள அனைத்தையும் கொண்டு வந்தார்கள். அது 4000 திர்ஹமாக இருந்தது. பெருமானார் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம், உங்களது வீட்டிலுள்ளவர்களுக்கு எதையாவது விட்டு விட்டு வந்துள்ளீர்களா? எனக் கேட்டார்கள். அதற்கு அன்னார், வீட்டிலுள்ளவர்களுக்காக அல்லாஹ்வையும், அவனது ரஸூலையும் விட்டு விட்டு வந்துள்ளேன் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் உமர் அவர்கள் தமது வீட்டிலுள்ள பாதி பொருட்களை எடுத்துக் கொண்டு வந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம், உங்களது வீட்டிலுள்ளவர்களுக்கு எதையாவது விட்டு விட்டு வந்துள்ளீர்களா? எனக் கேட்டார்கள். அதற்கு அன்னார், பாதி பொருட்களை விட்டு விட்டு வந்துள்ளேன் என்று கூறினார்கள்.

இந்த சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் 100 அவ்கியாவை வழங்கினார்கள். ஒரு அவ்கியா என்பது 40 திர்ஹமாகும். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், உஸ்மான் பின் அஃப்வான் மற்றும் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் ஆகியோர் பூமியில் அல்லாஹ்வின் கருவூலங்களில் ஒரு கருவூலமாவர். அவர்கள் அல்லாஹ்வின் வழியில் செலவு செய்கின்றனர் என்று கூறினார்கள்.

இந்த சந்தர்ப்பத்தில் பெண்களும் தியாகம் செய்தனர். நான் எடுத்துக் கூறி வருகின்ற இந்த சஹாபி ஹஸ்ரத் ஆஸிம் அவர்கள் இந்த சந்தர்ப்பத்தில் 70 வஸ்க் பேரீத்தம் பழங்களை வழங்கினார்கள். 1 வஸ்க் என்பது 60 சாஃ ஆகும். ஒரு சாஃ என்பது ஏறக்குறைய இரண்டரை கிலோ எடையை கொண்டதாகும்.

(அஸீரத்துல் ஹல்பிய்யா தொகுதி 3 பக்கம் 183–184 தபூக் போர் – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & லுகாத்துல் ஹதீஸ் தொகுதி 1 பக்கம் 82 அவ்கிய்யா தொகுதி 4 பக்கம் 487 வஸ்க் தொகுதி 2 பக்கம் 648 ஸாஃ – 2005 ஆம் ஆண்டு லாஹூரிலுள்ள குதுப் ஹானாவில் அச்சிடப்பட்டது)

எவ்வாறிருப்பினும் ஆஸிம் அவர்கள் இந்த சந்தர்ப்பத்தில் அவர்களிடமிருந்த பேரீத்தம் பழங்களை வழங்கினார்கள். அதுவும் அதிக அளவில் வழங்கினார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் ஸிரார் பள்ளிவாசலை இடிக்குமாறு எந்த சஹாபாக்களுக்கு கட்டளையிட்டார்களோ அவர்களில் ஹஸ்ரத் ஆஸிம் பின் அதீ அவர்களும் ஒருவர் ஆவார்கள்.

இந்த சம்பவம் தொடர்பாக இவ்வாறு எடுத்துக் கூறப்பட்டுள்ளது. ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: பனூ அம்ர் பின் அவ்பைச் சார்ந்தவர்கள் குபா பள்ளிவாசலை கட்டினர். மேலும் பெருமானார் (ஸல்) அவர்கள் இங்கு வந்து தொழ வைக்குமாறு அன்னாருக்கு செய்தி அனுப்பினார்கள். பனூ கனம் பின் அவ்ஃபைச் சார்ந்தவர்கள் இந்த பள்ளியைப் பார்த்தபோது பனூ அம்ர் கட்டியதைப் போன்றே நாமும் ஒரு பள்ளிவாசலைக் கட்டுவோம் என்றனர்.

பனூ ஆமிர் என்பவன் அவன் குழப்பத்தை ஏற்படுத்தக் கூடியவன் ஆவான். அவன் இவர்களிடம் நீங்களும் பள்ளிவாசலைக் கட்டுங்கள். மேலும் இதில் முடிந்த அளவு ஆயுதங்களையும் ஒன்று சேருங்கள் என்று கூறினான். அவனது நோக்கம் இதை குழப்பத்திற்கான தலைமையமாக ஆக்க வேண்டும் என்பதாக இருந்தது. மேலும் அவன் கூறினான்: நான் ரோம் நாட்டின்அரசரான கைஸரிடம் செல்கின்றேன். அங்கிருந்து ஒரு படையை கொண்டு வருவேன். பிறகு முஹம்மது (ஸல்) மற்றும் அவர்களுடன் இருப்பவர்களை இங்கிருந்து வெளியேற்றி விடுவேன் என்று கூறினான்.

பள்ளிவாசல் கட்டி முடிக்கப்பட்ட பிறகு அந்த மக்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடம் வந்து, நாங்கள் பலவீனமானவர்களுக்காக ஒரு பள்ளிவாசலை கட்டியுள்ளோம். அவர்களால் தூரமாகச் சென்று தொழ முடியாது என்று கூறியவாறு அன்னாரிடம், நீங்கள் இந்த பள்ளிவாசலில் தொழ வைக்க வாருங்கள் என்று கூறினர். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், நான் இப்போது பயணத்திற்கான ஆயத்தமாகிக் கொண்டிருக்கின்றேன். இன்ஷா அல்லாஹ் நான் திரும்பி வந்த பிறகு தொழ வைப்பேன் என்று கூறினார்கள்.

இது தபூக் போருக்கான பயணமாக இருந்தது. தபூக் போரிலிருந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திரும்பி வரும் போது மதீனாவிலிருந்து சிறிது தொலைவிலுள்ள ஸீஒன் என்ற இடத்தில், இதற்கும் மதீனாவிற்கும் ஒரு மணி நேரம் பயண தொலைவில் உள்ளது. அங்கு தங்கினார்கள். அப்போது அன்னாருக்கு ஸிரார் பள்ளிவாசல் தொடர்பாக வஹீ அருளப்பட்டது. அது சூரா தவ்பாவில் உள்ளது.

وَالَّذِيْنَ اتَّخَذُوْا مَسْجِدًا ضِرَارًا وَّكُفْرًا وَّتَفْرِيْقًا بَيْنَ الْمُؤْمِنِيْنَ
وَاِرْصَادًا لِّمَنْ حَارَبَ اللّٰهَ وَرَسُوْلَهٗ مِنْ قَبْلُ ؕ وَلَيَحْلِفُنَّ
اِنْ اَرَدْنَاۤ اِلَّا الْحُسْنٰى ؕ وَاللّٰهُ يَشْهَدُ اِنَّهُمْ لَكٰذِبُوْنَ

அதாவது தீங்கிழைக்கவும், நிராகரிப்பிற்கு உதவவும், நம்பிக்கையாளருள் பிரிவினை உண்டாக்கவும், அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் எதிர்த்து முன்னர் போராடியவருக்குப் பதுங்குமிடமாகவும் பள்ளிவாயில் ஒன்றைக் கட்டியவர்கள் நாங்கள் நன்மையையே நாடுகிறோம் என்று நிச்சயமாக சத்தியம் செய்வார்கள். ஆனால் நிச்சயமாக அவர்கள் பொய்யுரைத்துக் கொண்டிருக்கின்றனர் என்று அல்லாஹ் சாட்சி பகர்கின்றான். (9:107)

இதற்குப் பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் மாலிக் பின் துக்ஷம் மற்றும் நுஃமான் பின் அதீ ஆகியோரை அழைத்து ஸிரார் பள்ளிவாசலை இடிக்குமாறு கட்டளையிட்டார்கள்.

சில அறிவிப்புகளில் இதுவும் வந்துள்ளது. அதாவது ஹஸ்ரத் ஆஸிம் பின் அதீ மற்றும் ஆமிர் பின் சகன் மற்றும் ஹஸ்ரத் ஹம்ஸா அவர்களை ஷஹீதாக்கிய வஹ்ஷி மற்றும் சுவைது பின் அப்பாஸ் ஆகியோரையும் பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த நோக்கத்திற்காக அனுப்பினார்கள்.

ஷரஹ் சர்கானியில் இதுவும் எழுதப்பட்டுள்ளது. அதாவது பெருமானார் (ஸல்) அவர்கள் முதலில் இரண்டு நபர்களை அனுப்பி இருக்கலாம். பிறகு இவர்களுக்கு உதவி செய்வதற்காக மேலும் நான்கு நபர்களை அனுப்பி இருக்கலாம். பெருமானார் (ஸல்) அவர்கள் இவர்களை ஸிரார் பள்ளியை இடித்து விடுமாறும், எரித்து விடுமாறும் கட்டளையிட்டார்கள். இவர்கள் அனைவரும் மிக வேகமாக ஹஸ்ரத் மாலிக் பின் துஹ்ஷம் அவர்களின் கோத்திரமான பனூ சாலமை சென்றடைந்தனர்.

ஹஸ்ரத் மாலிக் பின் துஹ்ஷம் அவர்கள் ஹஸ்ரத் மஅன் அவர்களிடம், எனக்கு சிறிது காலக்கெடு வழங்குங்கள். நான் வீட்டிலிருந்து நெருப்பை கொண்டு வரட்டும் என்று கூறினார்கள். எனவே அவர்கள் வீட்டிலிருந்து காய்ந்த பேரீத்தம் பழ கிளையில் நெருப்பை மூட்டி எடுத்து வந்தார்கள். மேலும் அவர்கள் மக்ரிப் மற்றும் இஷா நேரத் தொழுகைக்கு இடையேயான நேரத்தில் ஸிரார் பள்ளிவாசலுக்கு அருகே சென்றார்கள். மேலும் அதற்கு தீ வைத்து அதனை மண்ணோடு மண்ணாக்கி விட்டார்கள்.

இது தொடர்பான சில விஷயங்களை நான் ஹஸ்ரத் மாலிக் பின் துஹ்ஷம் அவர்களின் குறிப்பில் எடுத்துக் கூறியுள்ளேன். எவ்வாறிருப்பினும் அந்த நேரத்தில் இந்த பள்ளியைக் கட்டியவர்கள் அங்கு இருந்தனர். ஆனால் நெருப்பு மூட்டப்பட்ட உடன் இவர்கள் இங்கும் அங்கும் ஓடி விட்டனர். பெருமானார் (ஸல்) அவர்கள் மதீனா வந்ததும் இந்த பள்ளியின் இடத்தை ஆஸிம் பின் அதீ அவர்களுக்கு இங்கு வீட்டை கட்டிக் கொள்ளட்டும் என்று கருதி கொடுக்க விரும்பினார்கள். ஆனால் ஆஸிம் அவர்கள், இந்த இடத்தை நான் பெற மாட்டேன். அவர்கள் மன்னிப்பு கோரினார்கள். ஏனென்றால் இந்த இடம் தொடர்பாக அல்லாஹ் வஹீ அறிவித்திருந்தான். அதாவது இது எத்தகைய இடம் என்றால் அல்லாஹ்விற்கு இங்கு கட்டடம் கட்டுவது விருப்பத்திற்குரியதாக இருக்கவில்லை. எனவே எனக்கு விருப்பமில்லை என்று அவர்கள் கூறினார்கள்.

எனவே பெருமானார் (ஸல்) அவர்கள் சாபித் பின் அக்ரம் அவர்களுக்கு இந்த இடத்தை வழங்கினார்கள். அவர்களிடம் எந்த வீடும் இருக்கவில்லை. ஆஸிம் பின் அதீ அவர்கள் கூறினார்கள்: என்னிடத்தில் வீடு இருக்கிறது. நான் மன்னிப்பை வேண்டுகின்றேன் என்று கூறியவாறு இதனை சாபித் பின் அக்ரம் அவர்களுக்கு கொடுத்து விடுங்கள். ஏனென்றால் அவர்களிடம் வீடு இல்லை. அவர்கள் இங்கு வீடு கட்டிக் கொள்ளட்டும் என்று கூறினார்கள். எனவே பெருமானார் (ஸல்) அவர்கள் ஸிரார் பள்ளிவாசல் இருந்த அந்த இடத்தை சாபித் பின் அக்ரம் அவர்களுக்கு கொடுத்து விட்டார்கள்.

இப்னு இஸ்ஹாக்கின் கூற்றிற்கேற்ப ஸிரார் பள்ளியை கட்டிய நயவஞ்சர்களின் பெயர் இதுவாகும். அதாவது குஸானா பின் காலித், முஃதப் பின் கஷீர் பின் அஸ்ஹர், அப்பாது பின் ஹனீஃப், ஜாரியா பின் ஆமிர் மற்றும் அவரது இரண்டு மகன்களான மஜ்மஃ பின் ஜாரிஆ மற்றும் ஸைது பின் ஜாரிஆ, நஃபில் பின் ஹாரிஸ், யக்ஸல் பின் நுஃமான் வதியா ஆகியோர் ஆவர். அபூ ஆமிர் ரஹப் என்பவனுக்கு பெருமானார் (ஸல்) அவர்கள் குழப்பமிழைப்பவன் என்று பெயர் சூட்டினார்கள். அவனுடன் இவர்கள் அனைவரும் இணைந்திருந்தார்கள்.

(சபலுல் ஹுதா வர்ரிஷாது தொகுதி 5 பக்கம் 470–472 தபூக் போர் – 1993 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & ஷரஹ் ஸர்கானீ அலல் மவாஹிபுத் துன்யா தொகுதி 4 பக்கம் 97–98 தபூக் போர் – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு முறை தில்லி பயணத்தை மேற்கொண்டார்கள். அப்போது தில்லி ஜாமிஆ பள்ளிவாசலைப் பார்த்து அன்னார் கூறினார்கள்: மிக அழகான பள்ளிவாசலாகும். ஆனால் பள்ளிவாசலின் உண்மையான அழகு கட்டடத்துடன் மட்டும் அல்ல. மாறாக கலப்பற்ற முறையில் தொழுகின்ற தொழுகையாளிகளினால்தான் இருக்கின்றது. இல்லையென்றால் இந்த அனைத்து பள்ளிவாசல்களும் காலியாக இருக்கின்றது. அந்த காலத்தில் அதிகமான பள்ளிவாசல்கள் காலியாகவே இருந்தது. பெருமானார் (ஸல்) அவர்களின் பள்ளிவாசல் சிறியதாக இருந்தது.

அன்னார் கூறுகின்றார்கள்: பேரீத்தம் மரத்தின் கட்டைகளால் அந்த பள்ளிவாசலின் மேற்கூரை கட்டப்பட்டிருந்தது. மழை நேரத்தில் மேற்கூரையிலிருந்து தண்ணீர் வடியும்.

அன்னார் கூறினார்கள்: பள்ளிவாசலின் அழகு தொழுகையாளிகள் மூலமாகவே உள்ளது. பெருமானார் (ஸல்) அவர்களின் நேரத்தில் உலகவாதிகளும் ஒரு பள்ளியை கட்டினர். அது இறைவனது கட்டளைக்கேற்ப இடிக்கப்பட்டது. மேலும் அதன் பெயர் ஸிரார் பள்ளிவாசலாகும். அதாவது தீங்கு இழைக்கக்கூடிய பள்ளிவாசல். அந்த பள்ளிவால் மண்ணோடு மண்ணாக்கப்பட்டது.

அன்னார் கூறுகின்றார்கள்: பள்ளிவாசல் தொடர்பாக உள்ள கட்டளை என்னவென்றால், அது இறையச்சத்தின் அடிப்படையில் கட்டப்பட வேண்டும். (மல்ஃபூஸாத் தொகுதி 8 பக்கம் 170)

இதுவே பள்ளிவாசல் கட்டப்படுவதன் உண்மையான நோக்கமாகும். இன்றைய காலத்தில் முஸ்லிம்களில் ஒரு பிரிவினருக்கு பள்ளிவாசலை நிரப்புவதன் பக்கம் கவனம் ஏற்பட்டுள்ளது. ஆனால் வியப்பிற்குரிய விஷயம் என்னவென்றால், இவர்களுக்கு இந்த கவனமும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகைக்கு பிறகே ஏற்பட்டுள்ளது.

இறைவணக்கத்தின் பக்கம் இவர்களுக்கு கவனம் ஏற்பட்டுள்ளது என்றால் அதுவும் அன்னாரது வாதத்திற்குப் பிறகே ஏற்பட்டுள்ளது. இவர்கள் அழகான பள்ளிவாசலைக் கட்டுகின்றனர். மிகவும் கவனம் செலுத்தியவாறு பள்ளிவாசல் கட்டுகின்றனர். அவர்களில் சிலர் பள்ளிவாசலை நிரப்புவதன் பக்கம் கவனம் செலுத்தியுள்ளனர். பாகிஸ்தானில் இன்றைய நாடுகளில் கவனம் ஏற்பட்டுள்ளது. ஆனால் அவர்களது பள்ளிவாசல் இறையச்சம் இல்லாமல் இருக்கின்றது.

அல்லாஹ் ஸிரார் பள்ளிவாசலை இடிப்பதற்கான கட்டளையை வழங்கியுள்ள இந்த வசனம் மற்றும் அதற்கு அடுத்து வருகின்ற வசனங்களில் மிகத் தெளிவாக கூறியுள்ளான். அதாவது உண்மையான பள்ளிவாசல் இறையச்சத்தின் அடிப்படையில் கட்டப்படுவதுதான். ஆனால் அஹ்மதியல்லாத ஆலிம்கள் தமது எண்ணத்தில் இறையச்சமானது வெறும் இதுவே என்று கருதுகின்றனர். அதாவது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு எதிராக பள்ளிவாசல்களில் நின்றவாறு எல்லா விதமான அசுத்தமான பேச்சுக்களைப் பேசுவது, அன்னார் தொடர்பாக தீய வார்த்தைகளை பயன்படுத்துவது, ஜமாஅத்தை ஏசிப்பேசுவது ஆகியவற்றையே கருதுகின்றனர்.

இதுமட்டுமல்லாமல், இந்த பள்ளிவாசல்களில் இமாமத் மற்றும் பிரிவுகளுக்கிடையிலுள்ள கருத்து வேறுபாட்டின் காரணமாக இவர்கள் ஒருவர் மற்றவருக்கு எதிராகவும் ஏசிப்பேசுகின்றனர். இப்போது இது பரவிக் கொண்டிருக்கிறது. அதாவது பள்ளிவாசல்களில் நடக்கின்ற பெரும்பான்மையான குழப்பமான சம்பவங்கள், ஒருவர் மற்றவரை ஏசிப்பேசுகின்ற சம்பவங்கள் பரவிக் கொண்டிருக்கிறது.

ஆக இந்த அனைத்து விஷயங்களும் இவர்களிடம் இறையச்சம் இல்லை. மேலும் இவர்களது பள்ளிவாசல்களுக்கு செலுத்த வேண்டிய உண்மையான உரிமை செலுத்தப்படவில்லை என்பதை காட்டுகிறது. மேலும் இவர்களது செயல்களின் மூலம் அஹ்மதிகள் பாடம் கற்க வேண்டும்.

ஆக நாம், நமது பள்ளிவாசலை இறையச்சத்தின் அடிப்படையில் வைப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். நாம் இறையச்சத்தை முன்நிறுத்தியவாறு இந்த பள்ளிவாசல்களை நிரப்புவதற்காக வர வேண்டும். இதுவே உண்மையான நோக்கமாகும். இது எப்போது வரை நம்மிடம் நிலைபெற்றிருக்குமோ அப்போது வரை அல்லாஹ்வின் அருட்களுக்கு நாம் வாரிசாகிக் கொண்டே செல்வோம். இன்ஷா அல்லாஹ்.

ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் لِّمَنْ حَارَبَ اللّٰهَ என்பதற்கு விளக்கமளித்தவாறு கூறுகின்றார்கள்: இது கிறிஸ்தவனான அபூ ஆமிரைக் குறிக்கும். அவனது சூழ்ச்சிகளில் ஒரு சூழ்ச்சி என்னவென்றால், பெருமானார் (ஸல்) அவர்கள் இதில் தொழுதால் பிறகு சில முஸ்லிம்களும் இங்கு வந்து தொழுகைக்காக வருவார்கள். இவ்வாறு முஸ்லிம்களின் ஜமாஅத்தை நான் உடைத்து விடுவேன் என்று சூழ்ச்சி செய்தான்.

மேலும் அபூ ஆமிர் தமது ஒரு கனவையும் பரப்பியிருந்தான். அதாவது நபி (ஸல்) அவர்கள் எல்லாராலும் புறக்கணிக்கப்பட்டு தனித்து விடப்பட்டு தம்முடன் எவரும் இல்லாமல் மரணிப்பார் (நவூதுபில்லாஹ்) என்று பரப்பியிருந்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரது இந்த கூற்றை செவியுற்ற பிறகு கூறினார்கள்: கனவு உண்மையானதாகும். அவர் சரியாகவே கூறுகின்றார். உண்மையான விஷயம் என்னவென்றால், இந்த கனவு இந்த அடிப்படையில் உண்மையாகும். அதாவது அவர் தமது நிலையையே அவ்வாறு கண்டுள்ளார். பிறகு அவ்வாறே நடந்தது.

அவர்கள் தொடர்பாக எழுதுகின்றார்கள்: இனி வருங்காலங்களிலும் எவராவது இவ்வாறு செய்தால் அவரது முடிவும் இவ்வாறே இருக்கும்.

(ஹகாயிக்குல் ஃபுர்கான் தொகுதி 2 பக்கம் 310 وَالَّذِيْنَ اتَّخَذُوْا مَسْجِدًا ضِرَارًا வசனத்தின் விளக்கம்)

நாம் பார்க்கின்றோம். இன்றைய நாட்களில் எதிரிகளின் முடிவு இவ்வாறே ஆகிக் கொண்டிருக்கிறது.


**திருக்குர்ஆனிலிருந்து...**

தங்களுடைய செல்வத்தை இரவிலும், பகலிலும் மறைமுகமாகவும், வெளிப்படையாகவும் (அல்லாஹ்வின் வழியில்) செலவு செய்பவர்களுக்கு அவர்களின் இறைவனிடம் அவர்களுக்குரிய கூலி (பாதுகாக்கப்பட்டு) உள்ளது. அவர்களுக்கு எவ்வித அச்சமும் இல்லை. அவர்கள் கவலையடையவுமாட்டார்கள். (2:275)

A.Nasir Ahmad

அமீர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், மேலப்பாளையம்


அடுத்து நான் எடுத்துக் கூற இருக்கின்ற சஹாபியின் பெயர் ஹஸ்ரத் உமர் பின் அவ்ஃப் ஆகும். அன்னாரது பெயர் உமைர் என்றும் வந்துள்ளது. அன்னாரது தந்தையின் பெயர் அவ்ஃப் ஆகும். அன்னாரது சுட்டுப் பெயர் அபூ அம்ர் ஆகும். அன்னார் மக்காவில் பிறந்தார்கள். இப்னு சஅதின் கூற்றிற்கேற்ப, அன்னார் யமன் நாட்டைச் சார்ந்தவர்கள். அதாவது யமனில் வசிக்கக் கூடியவர்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅது – உமர் பின் அவ்ஃப் தொகுதி 3 பக்கம் 254 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது & அல் அஸாபா ஃபீ தமீஸுஸ் சஹாபா தொகுதி 4 பக்கம் 552–553 உமர் பின் அவ்ஃப் – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

வரலாற்றாசிரியவர்கள், ஹதீஸ் வல்லுநர்கள் இந்த சஹாபியின் பெயரைப் பற்றி பல்வேறு கருத்துக்களை எழுதியுள்ளார்கள். இமாம் புகாரி, இப்னு இஸ்ஹாக், இப்னு சஅது, அல்லாமா இப்னு அப்து, அல்லாமா இப்னு அஸீர் ஜஸ்ரீ போன்றோர் அன்னாரது பெயரை அம்ர் என்று குறிப்பிட்டுள்ளனர். ஆனால் இப்னு ஹிஷாம், மூஸா பின் உக்பா, வாகிதி போன்றோர் அன்னாரது பெயரை உமைர் என்று குறிப்பிட்டுள்ளனர்.

அல்லாமா பத்ருத்தீன் அய்னி மற்றும் அல்லாமா இப்னு ஹிஜ்ரி அஸ்கலானி ஆகிய இருவரும் சஹீஹ் புகாரிக்கு விளக்கம் எழுதியுள்ளனர். இவர்களது கூற்றிற்கேற்ப அம்ர் பின் அவ்ஃப் மற்றும் உமைர் பின் அவ்ஃப் ஆகியோர் ஒரு நபரின் பெயரே ஆகும்.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅது – உமைர் பின் அவ்ஃப் தொகுதி 3 பக்கம் 310, தொகுதி 4 பக்கம் 269 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா தொகுதி 4 பக்கம் 246 உமர் பின் அவ்ஃப் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அல் அஸாபா ஃபீ தமீஸுஸ் சஹாபா தொகுதி 4 பக்கம் 552,553 உமர் பின் அவ்ஃப் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இமாம் புகாரி அவர்களோ, ஹஸ்ரத் அம்ர் பின் அவ்ஃப் அன்ஸாரி அவர்கள் குரைஷிகளின் பனூ ஆமிர் பின் லூயியின் நட்புக் கோத்திரத்தைச் சார்ந்தவர் என்று எழுதியுள்ளார்கள். ஆனால் இப்னு ஹிஷாம், இப்னு சஅது ஆகியோர் அன்னார் குரைஷி குடும்பத்தின் பனூ ஆமிர் பின் லூயியைச் சார்ந்தவர் என்று குறிப்பிட்டுள்ளனர். புகாரியின் விரிவுரையாளரான அல்லாமா பத்ருத்துன் அவர்கள் இவ்விரண்டு கருத்துக்களையும் இணைத்துக் கூறியுள்ளார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: உண்மையில் ஹஸ்ரத் அம்ர் பின் அவ்ஃப் அவர்கள் அன்ஸார்களின் அவ்ஸ் கோத்திரம் அல்லது கஸ்ரத் கோத்திரத்தைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். அவர்கள் மக்காவிற்கு சென்று தங்கினார்கள். அங்கு சென்று அங்கு சிலரது நண்பரானார்கள். இவ்வாறு அவர்கள் அன்ஸாரிகளாகவும், முஹாஜிராகவும் விளங்கினார்கள்.

(சஹீஹுல் புகாரி கிதாபுல் ஜிஸ்யா بَابُ الْجِزْيَةِ وَالْمُوَادَعَةِ مَعَ أَهْلِ الْحَرْبِ ஹதீஸ் எண் 3158)


**திருக்குர்ஆனிலிருந்து...**

நம்பிக்கை கொண்டு (பொருத்தமான) நற்செயல்களைச் செய்து, தொழுகையை நிலைநாட்டி, ஸக்காத்து கொடுத்தும் வருகின்றவர்களுக்கு நிச்சயமாக அவர்களுடைய இறைவனிடம் அவர்களுக்குரிய கூலி உண்டு. அவர்களுக்கு எவ்வித அச்சமும் இல்லை. மேலும் அவர்கள் கவலையடைவுமாட்டார்கள். (2:278)

A.Shamsul Alam

காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்

ஹஸ்ரத் அம்ர் பின் அவ்ஃப் அவர்கள் ஆரம்பத்திலேயே இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 254 உமர் பின் அவ்ஃப் – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அன்னார் மக்காவிலிருந்து மதீனா ஹிஜ்ரத் செய்த போது கபாவில் ஹஸ்ரத் குல்ஸூம் பின் அல்ஹதம் என்பரது வீட்டில் தங்கினார்கள். அன்னார் பத்ர், உஹது, அகழ் உட்பட அனைத்துப் போர்களிலும் பெருமானார் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅது – உமைர் பின் அவ்ஃப் தொகுதி 3 பக்கம் 217 – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது & அல் அஸாபா தொகுதி 3 பக்கம் 46 சஅது பின் கைஸ்மா – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அன்னார் ஹஸ்ரத் உமர் அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் வஃபாத்தானார்கள். அன்னாரது ஜனாஸா தொழுகையை ஹஸ்ரத் உமர் அவர்கள் தொழ வைத்தார்கள்.

(அல் அஸாபா ஃபீ தமீஸூஸ் சஹாபா தொகுதி 4 பக்கம் 553 உமர் பின் அவ்ஃப் – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அடுத்து நான் எடுத்துக் கூற இருக்கின்ற சஹாபியின் பெயர் ஹஸ்ரத் மஅன் பின் அதீ ஆகும். அன்னார் அன்ஸார்களின் பனூ அம்ர் கோத்திரத்தின் நட்புக் கோத்திரத்தைச் சார்ந்தவர்.

(இப்னு ஹிஷாம் பக்கம் 29 – 2009 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் இப்னு ஹஸமில் அச்சிடப்பட்டது)

அன்னார் நான் இதற்கு முன்பு எடுத்துக்கூறிய ஆஸிம் பின் அதீ அவர்களின் சகோதர் ஆவார்கள். ஹஸ்ரத் மஅன் அவர்கள் 70 அன்ஸார்களுடன் பைஅத்தே உக்பாவில் கலந்து கொண்டார்கள். அன்னார் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்கு முன்பாகவே எழுதத் தெரிந்திருந்தார்கள். அந்த நேரத்தில் மிகக் குறைவானவர்களுக்கே எழுதத் தெரியும்.

அன்னார் பத்ர், உஹது, அகழ் உட்பட அனைத்துப் போர்களிலும் பெருமானார் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள். ஹஸ்ரத் ஸைது பின் கத்தாப் அவர்கள் மக்காவிலிருந்து மதீனா ஹிஜ்ரத் செய்தார்கள். அதற்குப் பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் மஅன் பின் அதீ மற்றும் ஸைது பின் கத்தாப் ஆகியோருக்கிடையே சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅது தொகுதி 3 பக்கம் 244–245 மஅன் பின் அதீ – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உமர் அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணமடைந்தபோது நான் ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களிடம், தாங்கள் எங்களது சகோதரர்களான அன்ஸார்களிடம் எங்களுடன் வாருங்கள் என்று கூறினேன். எனவே நாங்கள் சென்றோம். அவர்களில் பத்ர் போரில் பங்கு பெற்ற இருவர் எங்களை சந்தித்தார்கள். நான் உர்வா பின் சுபைர் அவர்களிடம் கூறினேன். அதற்கு அவர், அது ஹஸ்ரத் உவைம் பின் சாயிதா மற்றும் ஹஸ்ரத் மஅன் பின் அதீ ஆவார்கள் என்று கூறினார்கள்.

(சஹீஹுல் புகாரி கிதாபுல் மகாஸி... ஹதீஸ் எண் 4021)

ஹஸ்ரத் உமர் அவ்ரகளின் அறிவிப்பு இப்போது எடுத்துக் கூறப்பட்டது. இது தொடர்பான மேலும் விரிவான விவரம் புகாரியின் இன்னொரு அறிவிப்பில் வந்துள்ளது. அதன் சில பகுதிகளை நான் எடுத்துக் கூறுகின்றேன்.

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் முஹாஜிரீன்களில் பலருக்கு திருக்குர்ஆனை கற்றுக் கொடுத்துள்ளேன். அவர்களில் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்களும் ஒருவர் ஆவார்கள். ஒரு முறை நான் மனாவில் இருக்கின்ற அவர்களது வீட்டிற்குச் சென்றேன். அப்போது அவர்கள் உமர் பின் கத்தாப் அவர்களிடம் சென்றிருந்தார்கள்.

இந்த சம்பவம் ஹஸ்ரத் உமர் அவர்கள் கடைசியாக செய்த ஹஜ்ஜின் போது நடந்ததாகும். அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் என்னிடம் திரும்பி வந்து, நீங்களும் இன்று அமீருல் முஃமினீனை சந்திக்க வந்த அந்த நபரை பார்த்திருக்க வேண்டாமா! அவர் இவ்வாறு கூறினார்: அமீருல் முஃமினீன்! உமர் சென்று விட்ட பிறகு நான் இன்னாரிடம் பைஅத் செய்வேன் என்று கூறியவரைப் பற்றி தெரியுமா? அதாவது ஹஸ்ரத் உமர் அவர்களின் கிலாஃபத்தின்போதே அன்னாருக்குப் பிறகு நான் இன்னாரிடம் பைஅத் செய்வேன் என்று கூறுகின்றார்.

பிறகு அவர் இவ்வாறு கூறினார்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! அபூபக்ர் அவர்களிடம் செய்த பைஅத் மிகவும் அவசர கோலத்தில் செய்யப்பட்டது. அபூபக்ர் அவர்களிடம் செய்யப்பட்ட பைஅத் நபூதுபில்லாஹ் தவறாகி விட்டது. இதைக் கேட்டு விட்டு ஹஸ்ரத் உமர் அவர்கள் மிகவும் கவலையில் ஆழ்ந்தார்கள். பிறகு அன்னார் கூறினார்கள்: அல்லாஹ் விரும்பினால், நான் இன்று மாலையில் மக்களுக்கிடையே நிற்பேன். மேலும் இந்த விவகாரத்தை வலுக்கட்டாயமாக தமது கையில் எடுக்கின்ற நபர்களை எச்சரிப்பேன் என்று கூறினார்கள்.

அப்துர் ரஹ்மான் கூறுகின்றார்கள்: நான் ஹஸ்ரத் உமர் அவர்களிடம், அமீருல் முஃமினீன் அவர்களே! இவ்வாறு செய்யாதீர்கள். ஏனென்றால் ஹஜ்ஜில் ஆமி மக்களும் அவ்பாஷ் மக்களும் ஒன்று கூடியிருப்பர். நீங்கள் மக்களிடையே நின்றால் இந்த மக்களே வலுக்கட்டாயமாக உங்களுக்கு அருகில் வந்து விடுவர். எனவே நீங்கள் நின்று இத்தகைய ஏதாவதொரு விஷயத்தைக் கூறினால் பிறகு அவர்கள் உங்கள் தொடர்பாக ஏதாவதொரு விஷயத்தை பரப்பி விடக்கூடாது. மேலும் தாங்கள் கூறியவற்றை மக்களும் புரியாமல் இருந்து விடக்கூடாது என்று நான் அஞ்சுகின்றேன் என்று கூறினார்கள்.


### திருக்குர்ஆனிலிருந்து...

வானங்களிலும், பூமியிலுமுள்ளவை (யாவும்) அல்லாஹ்விற்கே உரியன. உங்கள் உள்ளங்களிலுள்ளதை நீங்கள் வெளிப்படுத்தினாலும், அல்லது அதனை மறைத்து வைத்தாலும் அதுபற்றி உங்களிடம் அல்லாஹ் கணக்குக் கேட்பான். பின்னர் தான் நாடுபவனை மன்னித்து விடுவான். தான் நாடுபவனுக்குத் தண்டனை கொடுப்பான். அல்லாஹ் எல்லாவற்றிற்கும் பேராற்றல் உடையவனாவான். (2:285)

S.S.H.Muhammed Lebbai (Melapalayam)

### திருக்குர்ஆனிலிருந்து...

கடன் பட்டவன் கஷ்டத்திலிருந்து பொருள் வசதி (கிடைக்கும்) வரை (அவனுக்குக்) காலக்கெடு அளிக்க வேண்டும். நீங்கள் அறிவுடையோராயின் (அசல் தொகையினைக் கூட அவனுக்கு) தருமமாகக் கொடுத்து விடுவது உங்களுக்கு மிகச் சிறந்ததாகும். (2:281)

M.Sabahul Islam & Mohaideen Ali (Melapalayam)

பிறகு அவர்கள் ஹஸ்ரத் உமர் அவர்களுக்கு ஆலோசனை வழங்கியவாறு நீங்கள் மதீனா செல்லும் வரை காத்திருங்கள் என்று கூறினார்கள். ஹஜ் நாளாக அது இருந்தது. மதீனா செல்வோம். ஏனென்றால், அது ஹிஜ்ரத் செய்த இடமாகும். அங்கு புரியும் தன்மையுடைய, நல்ல மக்களை தனியாக சந்தித்து அவர்களிடம் நீங்கள் எதை கூற விரும்புகின்றீர்களோ கூறுங்கள். அறிவு படைத்தவர்கள் உங்களது கூற்றை புரிந்து கொள்வார்கள். அவர்கள் சுயமே விளக்கம் கொடுக்க மாட்டார்கள் என்று கூறினேன்.

பிறகு ஹஸ்ரத் உமர் அவர்கள் கூறினார்கள்: நல்லது! அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் முதல் முறையாக மதீனாவில் குத்பா கொடுப்பதற்காக நிற்கும்போது இந்த விஷயத்தைக் கூறுவேன்.

இப்னு அப்பாஸ் கூறுகின்றார்கள்: நாங்கள் துல் ஹஜ்ஜாவின் இறுதியில் மதீனாவை சென்றடைந்தோம். ஜுமுஆ நாளன்று நாங்கள் ஜுமுஆ நேரத்தில் பள்ளிவாசலுக்கு வந்தோம். அங்கு சென்ற போது நான் சயீது பின் ஸைது அவர்களை மெம்பருக்கு அருகில் இருப்பதைக் கண்டேன். நான் அவர்களுக்கு அருகில் சென்று அமர்ந்து விட்டேன். எனது முட்டு அவர்களது முட்டை ஒட்டிக் கொண்டிருந்தது.

இவர்கள் முழு விளக்கத்தையும் எடுத்துக் கூறுகின்றார்கள். சிறிது நேரத்தில் உமர் பின் கத்தாப் அவர்கள் வந்தார்கள். அவர்களை எனக்கு முன்பே நான் பார்த்தபோது நான் சயீது பின் சுபைர் அவர்களிடம், இன்று உமர் அவர்கள் எத்தகைய விஷயத்தைக் கூறுவார்கள் என்றால் இது போன்ற விஷயத்தை அவர்கள் கலீஃபா ஆனதிலிருந்து கூறியது கிடையாது. அவர்கள் நான் கூறியவற்றை விநோதமாக புரிந்து கொண்டார். மேலும் உமர் அவர்கள் அவ்வாறு கூறுவார்கள் என்று நம்பிக்கை என்று கூறினார். ஹஸ்ரத் உமர் அவர்கள் மெம்பருக்கு அருகில் அமர்ந்தார்கள். பாங்கு கொடுக்கக் கூடியவர் அமைதியான பிறகு அன்னார் எழுந்து நின்று அல்லாஹ்வை புகழ்ந்தார்கள்.

பிறகு கூறினார்கள்: அம்மா பஅது. நான் இன்று எத்தகைய விஷயத்தைக் கூற உள்ளேன் என்றால் அதை நான் கூற வேண்டும் என்று எனக்காக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. எனது இந்த கூற்று எனது மரணத்திற்கு மிக அருகில் இருக்கிறதா என்பது எனக்குத் தெரியாது. எவர் இவ்விஷயத்தைப் புரிந்தாரோ மேலும் நல்ல முறையில் ஞாபகம் வைத்திருப்பாரோ அவர் இந்த விஷயத்தை மற்றவர்கள் வரை கொண்டு சேர்க்க வேண்டும். சிறந்த முறையில் எடுத்துச் செல்ல வேண்டும். மேலும் எவர் இதனை நான் சரியாக புரிந்து கொள்ளவில்லை என்று அஞ்சுகிறாரோ அவர் என் தொடர்பாக பொய் கூறுவதை நான் ஆகுமானதாக ஆக்கவில்லை. தவறான விஷயத்தைக் கொண்டு சேர்க்க வேண்டாம்.

பிறகு அன்னார் கூறினார்கள்: அல்லாஹ் முஹம்மது (ஸல்) அவர்களை உண்மையுடன் அனுப்பினான். அன்னார் மீது இறை கட்டளைகள் நிறைந்த ஷரீஅத்தை அருளினான். பிறகு ஹஸ்ரத் உமர் அவர்கள் அந்த கட்டளைகளையும் எடுத்துக் கூறினார்கள். இது மிகப்பெரிய நீண்ட விளக்கமாகும். இதுவொரு ஹதீஸாகும். இதனை நான் விடுகின்றேன்.

பிறகு அன்னார் கூறினார்கள். கேளுங்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இதனையும் கூறினார்கள்: அதாவது எவ்வாறு ஈஸா இப்னு மர்யத்தை மிகைப்படுத்தி புகழப்பட்டதோ அதேபோன்று என்னை மிகைப்படுத்தி புகழ வேண்டாம். நீங்கள் இதையே கூறுங்கள். அதாவது, அவர் அல்லாஹ்வின் அடியாராவார்.

பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: என் தொடர்பாக அவர் அல்லாஹ்வின் அடியார். மற்றும் அவனது தூதராவார் என்று கூறுங்கள்.

இதற்கு பிறகு ஹஸ்ரத் உமர் அவர்கள் கூறினார்கள்: உங்களில் ஒருவர், ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களுக்கு சாதாரணமாகவே கிடைத்து விட்டது என்று கூறுவதாக எனக்கு செய்தி வந்துள்ளது.

அன்னார் கூறுகின்றார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! நீங்கள் அபூபக்ர் (ரலி) மற்றும் என் தொடர்பாகவும் இதை கூறியுள்ளீர்கள். அதாவது இறைவன் மீது ஆணையாக! உமர் மரணித்து விட்டால் நான் இன்னாரிடம் பைஅத் செய்வேன்.

மேலும் அன்னார் கூறுகின்றார்கள்: எவர் ஒருவரும் ஏமாற்றத்தில் இருந்தவாறு ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களிடம் பைஅத் அவசர கோலத்தில் செய்யப்பட்டது தவறு ஏற்பட்டு விட்டது. இவ்வாறு அவர்கள் கலீஃபாவாகி விட்டார்கள் என்று கூறாதீர்கள். கேளுங்கள். அந்த பைஅத் அவ்வாறே நடைபெற்றது என்றாலும் அல்லாஹ் அனைத்து தீங்குகளிலிருந்தும் காப்பாற்றினான். அத்தகைய நிலைமை ஏற்பட்டிருந்தாலும் அல்லாஹ் அதன் தீங்கிலிருந்து காப்பாற்றினான். உங்களில் அபூபக்ரைப் போன்று எவரும் கிடையாது. அத்தகைய கலப்பற்ற, மார்க்க ஞானம் கொண்ட, இறையச்சமுள்ளவர் உங்களில் எவரும் இல்லை. இதற்குப் பிறகு சிறிது விளக்கம் உள்ளது.

பிறகு உமர் அவர்கள் கூறுகின்றார்கள்: நினைவில் கொள்ளுங்கள். எவர் முஸ்லிம்களின் ஆலோசனை இன்றி எவரிடமாவது பைஅத் செய்தால் அவரிடத்தில் எவரும் பைஅத் செய்யக்கூடாது.

ஹஸ்ரத் உமர் அவர்கள் கூறுகின்றார்கள்: அல்லாஹ் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு மரணத்தைக் கொடுத்த போது அன்ஸார்கள் எங்களது எதிரியாயினர். நாங்கள் அனைவரும் சகீஃபா பனூ சாயிதா என்ற இடத்தில் ஒன்றினைந்து அலி மற்றும் சுபைர் மற்றும் அவர்களுடன் இருந்தவர்கள் எங்களது எதிரியாயினர். மேலும் முஹாஜிர்கள் அபூபக்ர் அவர்களிடம் வந்து, அன்னாரிடம், நாம் நமது அன்ஸார் சகோதர்களிடம் செல்வோம் என்று கூறினர். இது தொடர்பாக நான் மேலே கூறினேன். அதையே இவர்கள் கூறினர். நாம் அவர்களுக்கு அருகில் சென்றபோது அவர்களில் இரண்டு நேர்மையான ஆண்களை சந்தித்தோம்.

முதல் அறிவிப்பிற்கேற்ப அந்த நேர்மையான ஆண்களில் ஒருவர் ஹஸ்ரத் மஅன் பின் அதீ என்று ஆவார்கள் என்று வந்துள்ளது.

எவ்வாறிருப்பினும் அன்னார் கூறுகின்றார்கள்: இந்த ஆலோசனைக்கேற்ப அன்ஸார்கள் ஒருமித்த கருத்தை கொண்டவர்களாக இருந்தனர். வழியில் நாங்கள் சந்தித்த இந்த இருவரும் இது தொடர்பாக எங்களிடம் கூறினர். அவர்கள்

### திருக்குர்ஆனிலிருந்து...

நீங்கள் அல்லாஹ்விடம் திரும்பவும் கொண்டு செல்லப்படுகின்ற நாளுக்கு அஞ்சுங்கள். அப்பொழுது ஒவ்வொருவருக்கும் அவர் சம்பாதித்தது முழுமையாகக் கொடுக்கப்படும். அவர்களுக்கு அநீதி இழைக்கப்பட மாட்டாது. (2:282)

Faizal Hameed Ilahi (Tittacherry)

### திருக்குர்ஆனிலிருந்து...

எங்கள் இறைவா! எங்களுக்கு நேர்வழி காட்டியதன் பின்னர் எங்கள் உள்ளங்களை கோணலாக்காதிருப்பாயாக. எங்களுக்கு உன்னிடமிருந்து அருளை வழங்குவாயாக. நிச்சயமாக நீயே வாரி வழங்குபவனாவாய். (3:9)

A.Basheer Ahmad (Melapalayam)

கூறினார்கள்: அதாவது முஹாஜிரீன்களின் ஜமாஅத்தே! நீங்கள் எங்கே செல்ல விரும்புகின்றீர்கள். அதற்கு நாங்கள், நாங்கள் அந்த அன்ஸார் சகோதரர்களை சந்திக்க விரும்புகின்றோம் என்று கூறினர். அதற்கு இவர்கள் இருவரும், ஒருபோதும் செல்லாதீர்கள். நீங்கள் அங்கு செல்லாமல் இருப்பதே உங்களுக்குச் சிறந்தது. மேலும் நீங்கள் எந்த ஆலோசனை செய்ய வேண்டுமோ அதை நீங்களே செய்யுங்கள் என்று கூறினேன்.

ஹஸ்ரத் உமர் அவர்கள் கூறுகின்றார்கள்: நான் கூறினேன். அல்லாஹ்வின் மீது ஆணையாக! நாங்கள் கண்டிப்பாக அவர்களிடம் செல்வோம் என்று கூறியவாறு நாங்கள் செல்ல ஆரம்பித்தோம். பனூ சாயிதாவிடம் சென்றோம். அங்கு அன்ஸார் மற்றும் அபூபக்ர், மற்றும் உமர் ஆகியோர் கிலாஃபத் தேர்ந்தெடுக்கப்படுவது தொடர்பாக பேச்சு நடைபெற்றுக் கொண்டிருந்தது. இது தொடர்பான விவரம் மிகவும் விரிவானதாகும்.

(சஹீஹுல் புகாரி கிதாபுல் மகாஸி... ஹதீஸ் எண் 6830)

இது தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் குறிப்பிட்டவாறு கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணித்தபோது சஹாபாக்களில் மூன்று கூட்டம் ஏற்பட்டது. ஒரு கூட்டத்தினர், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு இஸ்லாமிய அமைப்பை நிலைநாட்டக்கூய ஒரு நபர் கண்டிப்பாக இருக்க வேண்டும். எனவே நபியின் விருப்பத்தை அவர்களது குடும்பத்தைச் சார்ந்தவர்களால் தான் புரிய முடியும். எனவே நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் குடும்பத்திலிருந்து ஒருவர் நியமிக்கப்பட வண்டேும் என்று அவர்கள் எண்ணினர்.

இன்னொரு கூட்டத்தினர் இவ்வாறு கூறி வந்தனர். அதாவது, அன்னாரது பிள்ளைகளில் ஒரு நபர் நியமிக்கப்பட வேண்டும். வேறு எந்த குடும்பத்திலிருந்தும் எவரும் இருக்கக்கூடாது. இந்த கூட்டத்தினரது சிந்தனையில் இந்த விஷயம் இருந்தது. அதாவது, வேறு ஏதாவதொரு குடும்பத்திலிருந்து எவராவது கலீஃபாவாக நியமிக்கப்பட்டால் பிறகு மக்கள் அவரது கூற்றை கேட்க மாட்டார்கள். இவ்வாறு பிறகு அமைப்பில் குளறுபடி ஏற்படும் என்று கருதினர்.

அன்னாரது குடும்பத்தில் ஒருவர் கலீஃபாவாக நியமிக்கப்பட்டால் மக்களுக்கு இந்த குடும்பத்திற்கு கட்டுப்பட்டு நடந்து வந்துள்ள பழக்கம் இருப்பதால் மக்கள் இதனை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்வார். ஒரு அரசரின் கூற்றை மக்கள் கேட்கும் தன்மையைப் பெற்ற பிறகு அவர் மரணித்து விட்டால் பிறகு அவரது மகன் பிரதிநிதியாக திகழ்கின்றார். பிறகு மக்களும் கட்டுப்படுதலின் ஆர்வத்தில் அவ்வாறு செய்யத் தொடங்கி விடுவர்.

வேறு ஒரு கூட்டத்தினர் இவ்வாறு கருதினர். அதாவது இதற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது குடும்பத்திலிருந்து ஒருவரை நியமிப்பது என்பது நிபந்தனை கிடையாது. நமது நோக்கம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒரு பிரதிநிதியை ஏற்படுத்துவதுதான். எனவே எவர் இதற்கு அதிக தகுதி வாய்ந்தவராக இருக்கின்றாரோ அவரிடம் இப்பணி ஒப்படைக்கப்பட வேண்டும் என்று கருதினர்.

இந்த இரண்டாம் கூட்டத்திற்கு எதிரில் இரண்டு கூட்டம் இருந்தது. அவர்களும் அன்னாருக்குப் பிறகு ஏதாவதொரு பிரதிநிதி இருக்க வேண்டும் என்று ஏற்றுக் கொண்டிருந்தது. ஆனால் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பிரதிநிதி எந்த மக்களைச் சார்ந்தவராக இருப்பார்கள் என்பதில் கருத்து வேறுபாடு கொண்டிருந்தது.

இன்னொரு கூட்டம் இவ்வாறு கருதியது. அதாவது எந்த மக்கள் அதிகமாக அன்னாரது நெருக்கத்தில் இருந்தார்களோ அவர்களே இதற்கு தகுதியானவர்கள். அதாவது முஹாஜிர்கள் மற்றும் அவர்களிலும் குரைஷிகளின் கூற்றை ஏற்றுக் கொள்வதற்கு அரபு மக்கள் தயாராகி விடுவார்கள் என்று கருதினர்.

வேறு சிலரோ பெருமானார் (ஸல்) அவர்கள் மதீனாவில் மரணித்துள்ளார்கள். மதீனாவில் அன்ஸார்களின் தாக்கமே இருக்கிறது. எனவே இவர்களால் தான் சிறந்த முறையில் பணி செய்ய முடியும் என்று கருதினர்.

எவ்வாறிருப்பினும் அன்ஸார் மற்றும் முஹாஜிர் ஆகியோருக்கிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. அன்ஸார்கள் இவ்வாறு கருதி வந்தனர். அதாவது பெருமானார் (ஸல்) அவர்களின் வாழ்க்கை அமைப்பு ரீதியுடன் தொடர்புடையதாக இருக்கின்றது. மேலும் நமக்கிடையில் கழித்துள்ளார்கள். மேலும் மதீனாவில் கழித்துள்ளார்கள். மக்காவில் எவ்வித அமைப்பு ரீதியிலான ஏற்பாடும் கிடையாது. எனவே நாம் தான் இந்த அமைப்பை சரியாக சிறந்த முறையில் கொண்டு செல்ல முடியும். கிலாஃபத்தின் உரிமை எங்களுக்குத்தான் இருக்கிறது. வேறு எவருக்கும் கிடையாது என்று கருதினர்.

அவர்கள் இன்னொரு ஆதாரத்தையும் வழங்கினார்கள். அதாவது இந்த இடம் எங்களுடையதாகும். இயல்பாகவே நமது கூற்றுக்களே மக்கள் மீது அதிக தாக்கத்தை ஏற்படுத்தும். முஹாஜிர்களின் கூற்றிற்கு தாக்கம் இருக்காது. எனவே நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பிரதிநிதி நம்மிடமிருந்துதான் இருக்க வேண்டும். முஹாஜிர்களிலிருந்து இருக்கக் கூடாது என்று கூறினர்.

இதற்கு மாற்றமாக முஹாஜிர்கள் இவ்வாறு கூறி வந்தனர். அதாவது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எவ்வளவு நீண்ட காலம் எங்களுடன் கழித்தார்களோ அது போன்று உங்களுடன் கழிக்கவில்லை. நீங்கள் அன்னாருடன் இவ்வளவு நீண்ட காலம் இருக்கவில்லை. எனவே மார்க்கத்தைப் புரிந்து கொள்வதற்கான தகுதி எங்களிடம்தான் உள்ளது. அன்ஸார்களிடம் இல்லை என்று கூறி வந்தனர்.

இந்த கருத்து வேறுபாடு தொடர்பாக அன்னார் எழுதுகின்றார்கள்: இந்த கருத்து வேறுபாடு தொடர்பாக மக்கள் சிந்தித்துக் கொண்டு இருந்தனர். அவர்கள் எந்த முடிவையும் எட்டவில்லை. அன்ஸார்களுடைய ஹக்கில் இருந்த இந்த இறுதி கூட்டம் பனூ சாயிதாவின் இடத்தில் ஒன்று கூடி இது தொடர்பாக ஆலோசனை செய்ய ஆரம்பித்தனர். மேலும் சஅது பின் இபாதா இவர் ஹஸ்ரஜ் கோத்திரத்தின் தலைவர் ஆவார். இவரையே கலீஃபாவாக தேர்ந்தெடுக்க வேண்டும் என்று இவர்களது கவனம் சென்றது. எனவே அன்ஸார்கள் தமக்கிடையில் கலந்துரையாடியவாறு, நாடு நம்முடையதாகும்; பூமியும் நம்முடையதாகும்; சொத்துக்களும்

## திருக்குர்ஆனிலிருந்து...

எங்கள் இறைவா! நிச்சயமாக நீ மக்களெல்லாரையும் ஒரு நாளில் ஒன்று சேர்ப்பாய். இ(ந் நாள் வருவ)தில் ஐயமேதுமில்லை. நிச்சயமாக அல்லாஹ் (ஒருபோதும் தன்) வாக்குறுதிக்கு மாற்றம் செய்வதிலை. (3:10)

M.Y. Shahul Hameed (Melapalayam)

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

O.A.N. DOORS & STEELS



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
(opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

நம்முடையதாகும்; மேலும் இதிலே இஸ்லாத்தின் பலன் உள்ளது. அதாவது நம்மிடமிருந்தே ஏதாவதொரு கலீஃபா நியமிக்கப்பட வேண்டும். மேலும் இந்த பதவிக்கு சஅது பின் இபாதா அவர்களை விட சிறந்தவர் வேறு எவரும் இல்லை என்று அவர்கள் முடிவெடுத்தனர். இந்த பேச்சு நடைபெற்றுக் கொண்டிருந்தபோது சிலர், முஹாஜிர்கள் இதை மறுத்து விட்டால் என்ன செய்வது என்று கேட்டனர். அதற்கு ஒருவர், ஒரு அமீர் எங்களிடமிருந்தும், ஒருவர் உங்களிடமிருந்து இருக்க வேண்டும் என்று கூறுவோம் என்று கூறினார்.

சஅது அறிவு படைத்தவராக இருந்தார். அன்ஸார்கள் எவரை கலீஃபாவாக ஆக்க விரும்பினார்களோ அவர் கூறினார்: இது முதல் பலவீனமாகும். அதாவது ஒன்று கலீஃபா நம்மிடமிருந்து இருக்க வேண்டும். அல்லது அவர்களில் ஒருவர் இருக்க வேண்டும். இவ்வாறில்லையென்றால் இஸ்லாத்தில் கருத்து வேறுபாடு உருவாகும் என்று கூறினார்.

இந்த ஆலோசனைக்குப் பிறகு முஹாஜிர்களுக்கு இது பற்றி தெரிய வந்தது. அவர்கள் விரைவாக வந்தனர். ஹஸ்ரத் உமர் அவர்கள் கூறியவற்றை நான் மேலே கூறினேன். எனவே முஹாஜிர்கள் இவ்வாறு கருதினர். அதாவது முஹாஜிரீன்களில் ஒருவர் கலீஃபாவாக நியமிக்கப்படவில்லை என்றால் பிறகு அரபு மக்கள் கட்டுப்பட மாட்டார்கள். மதீனா மட்டுமல்ல மாறாக இது முழு அரபிற்கும் உரிய ஒன்றாகும். மதீனாவில் அன்ஸார்களின் ஆதிக்கம் இருந்தாலும், முழு அரபும் மக்காவின் மகத்துவம் மற்றும் கண்ணியத்தை ஏற்றுக் கொண்டிருந்தார்கள்.

எனவே முஹாஜிரீன்கள், இப்போது அன்ஸார்களில் எவராவது கலீஃபாவாக நியமிக்கப்பட்டால் பிறகு முழு அரபுக்கும் இது இக்கட்டான ஒரு காரியமாகி விடும் என்று கருதினர்.

எனவே அனைத்து முஹாஜிரீன்களும் அங்கு வந்தனர். அவர்களில் ஹஸ்ரத் அபூபக்ர், ஹஸ்ரத் உமர், ஹஸ்ரம் அபூ உபைதா அவர்களும் அடங்குவார்கள்.

ஹஸ்ரத் உமர் கூறுகின்றார்கள்: நான் இந்த சந்தர்ப்பத்தில் கூறுவதற்காக ஒரு பெரிய கட்டுரையை யோசித்து வைத்திருந்தேன். மேலும் நான் அங்கு சென்றதுமே எத்தகைய ஒரு சொற்பொழிவை நிகழ்த்துவேன் என்றால் அதன் மூலம் அனைத்து அன்ஸார்களும் என்று கூற்றை ஏற்றுக் கொள்வார்கள்.

மேலும் அன்ஸார் அல்லாமல் முஹாஜிரீன்களிலிருந்து எவராவது தான் கலீஃபாவாக தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டியது வரும் என்று நான் கருதினேன். ஆனால் நான் அங்கு சென்றதும் ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் சொற்பொழிவு நிகழ்த்த எழுந்து நின்றார்கள். அப்போது நான் எனது உள்ளத்தில் இவர் எதை கூறிவிடப் போகிறார் என்று கருதினேன்.

ஆனால் இறைவன் மீது ஆணையாக! நான் எந்த விஷயங்களை யோசித்து வைத்திருந்தேனோ அந்த அனைத்தையும் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். மாறாக, அதுமட்டுமின்றி தம் சார்பாகவும் அவர்கள் பல சான்றுகளை வழங்கினார்கள். அப்போது என்னால் அபூபக்ர் அவர்களுடன் போட்டி போட முடியாது என்று நான் புரிந்து கொண்டேன்.

முஹாஜிரீன்கள் அன்னாரிடம், இப்போது குரைஷிகளிடமிருந்து அமீர் இருப்பது அவசியம் என்று கூறினர். இதற்கு சான்றாக பெருமானார் (ஸல்) அவர்களது கூற்றான, குரைஷிகளிடமிருந்து உங்களது இமாம் இருக்க வேண்டும் என்று ஹதீஸை முன் வைத்தனர். மேலும் அவர்களது மார்க்கத்தில் முன்னேறுவது மற்றும் அவர்கள் மார்க்கத்திற்காக தியாகத்தைப் பற்றி எடுத்துக் கூறினர். இதற்கு குப்பாப் பின் முன்ஸிர் ஹஸ்ரமி எதிர்ப்பு தெரிவித்தார். மேலும் முஹாஜிர்களிலிருந்து கலீஃபா இருப்பதை நாங்கள் ஏற்க மாட்டோம். நீங்களும் ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் பிறகு ஒரு அமீர் உங்களிலிருந்தும், ஒரு அமீர் எங்களிலிருந்தும் இருக்கட்டும் என்று கூறினார்.

அதற்கு ஹஸ்ரத் உமர் அவர்கள், சிந்தித்து பேசுங்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரே நேரத்தில் இரண்டு அமீர் இருப்பதை ஆகுமானதாக ஆக்கவில்லை என்பது உங்களுக்குத் தெரியாதா என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இதிலிருந்து பெருமானார் (ஸல்) அவர்கள் கிலாஃபத் அமைப்பிற்கு கூறியுள்ள விளக்கங்கள் நிறைந்த இத்தகைய ஹதீஸ்களின் ஆதாரங்கள் நமக்கு கிடைக்கிறது. ஆனால் அன்னாரது வாழ்நாளில் சஹாபாக்களின் சிந்தனை இதன் பக்கம் செல்லவில்லை. இதன் காரணமும் இறைவனது ஞானம்தான்.

அன்னார் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் உமர் அவர்கள் கூறினார்கள்: உங்களது கூற்றுப்படி அதாவது உங்களிடமிருந்து ஓர் அமீரும், எங்களிடமிருந்து ஓர் அமீரும் நியமிக்கப்பட வேண்டும் என்பதை சிந்தனை ஏற்றுக் கொள்ளவில்லை.

இதற்குப் பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஹஸ்ரத் அபூ உபைதா அவர்கள் எழுந்து நின்று அன்ஸார்களைப் பார்த்து கூறினார்கள்: நீங்கள் மக்காவிற்கு வெளியில் ஈமான் கொண்டு முதல் சமுதாயம் ஆவீர்கள். இப்போது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது மரணத்திற்குப் பிறகு மார்க்கத்தின் நோக்கத்தை மாற்றிய முதல் சமுதாயமாக நீங்கள் ஆகிவிடாதீர்கள் என்று கூறினார்கள்.

அன்னாரது கூற்று எந்த அளவுக்கு தாக்கத்தை ஏற்படுத்தியது என்றால், பஷீர் பின் சஅது ஹஸ்ரஜி எழுந்து நின்றார்கள். அவர்கள் தமது சமுதாயத்திடம், இந்த மக்கள் உண்மையைக் கூறுகின்றனர். நாம் முஹம்மது (ஸல்) அவர்களுக்காக எந்த தியாகத்தை செய்தோமோ, மேலும் அன்னாருக்கு உதவி செய்தோமோ அது உலக நோக்கத்திற்காக செய்யவில்லை. மேலும் அன்னாருக்குப் பிறகு ஆட்சி கிடைக்க வேண்டும் என்பதற்காக செய்யவில்லை.

மாறாக, நாம் இறைவனுக்காக செய்தோம். எனவே இங்கு அமீராவது எங்களது உரிமை அல்லது கலீஃபா எங்களது உரிமை என்ற உரிமைக்கான கேள்வி இங்கு கிடையாது. மாறாக, கேள்வி இஸ்லாத்தின் முக்கியத்துவம் தொடர்பானதாகும். எனவே இதன் அடிப்படையில் முஹாஜிரீன்களிடமிருந்தே அமீர் நியமிக்கப்பட வேண்டும். ஏனென்றால் அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களுடன் மிக நீண்ட காலமாக நெருக்கத்தில் இருந்துள்ளார்கள் என்று கூறினார்கள்.

எனவே இது தொடர்பாக சிறிது நேரம் பேச்சு நடைபெற்றது. இறுதியாக 45 நிமிடத்திற்குப் பிறகு, முஹாஜிரீன்களிலிருந்தே கலீஃபா நியமிக்கப்பட வேண்டும் என்பதன் பக்கமே மக்களின் கருத்து சென்றது. எனவே ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் ஹஸ்ரத் உமர் மற்றும் ஹஸ்ரத் அபூ உபைதா அவர்களை இந்த பதவிக்காக முன்மொழிந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களே இந்த பெயரை முன்மொழிந்தார்கள். பிறகு அபூபக்ர் அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் உமர் அல்லது ஹஸ்ரத் அபூ உபைதா ஆகிய இருவரிடத்தில் எவரிடமாவது பைஅத் செய்ய வேண்டும் என்று கூறினார்கள். ஆனால் இருவருமே மறுத்து விட்டார்கள்.

மேலும் கூறினார்கள்: பெருமானார் (ஸல்) அவர்கள் எந்த நபரை தமது நோயின் நாட்களின் தொழுகைக்கு இமாமாக நியமித்தார்களோ, மேலும் அனைத்து அன்ஸார்களிலும் எவர் சிறந்தவரோ அவரிடமே நாங்கள் பைஅத் செய்வோம்.

ஏற்கனவே கூறப்பட்டு வந்துள்ள விஷயம் இதுவாகும். அதாவது ஹஸ்ரத் உமர் அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் கூறிய அனைத்து விஷயங்களும் எனக்கு பிடித்திருந்தது. ஆனால் ஒரு விஷயத்தை தவிர. அது என்னவென்றால், அவர்கள் ஹஸ்ரத் உமர் மற்றும் ஹஸ்ரத் உபைதா பெயரை முன்மொழிந்தது எனக்குப் பிடிக்கவில்லை.

அன்னார் கூறுகின்றார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் எனது பெயரை முன்மொழிந்த போது எனது நிலை என்னவாக இருந்ததென்றால், அபூபக்ர் இருக்கின்ற ஒரு சமுதாயத்திற்கு நான் அமீராக நியமிக்கப்படுவதை விட என் முன்னால் வந்து எனது தலையை துண்டித்திருந்தாலும் அதுவே எனக்கு மிகவும் விருப்பத்திற்குரிய விஷயமாக இருந்திருக்கும். அதாவது அவர்களது அந்தஸ்து அத்தகையதாகும். ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் இருக்கின்றபோது நான் அமீராக எவ்வாறு நியமிக்கப்படுவது. இதை நான் வெறுத்தேன். மற்ற அவர்களது அனைத்து கூற்றுகளும் சிறப்பாக இருந்தது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் உமர் அவர்கள் கூறினார்கள்: முஹாஜிரீன்களில் எவர் மிகச் சிறந்தவரோ நாம் அவரிடம் பைஅத் செய்வோம். இதன் பொருள் என்னவென்றால், ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களை விட வேறு எவரும் கிடையாது என்பதே ஆகும். எனவே அபூபக்ர் அவர்களிடம் பைஅத் செய்யப்பட்டது. முதலில் ஹஸ்ரத் உமர் அவர்கள் பைஅத் செய்தார்கள்.

பிறகு அபூ உபைதா அவர்கள் பைஅத் செய்தார்கள். பிறகு பஷீர் பின் சஅது ஹஸ்ரஜி பைஅத் செய்தார்கள். பிறகு அவ்ஸ் மற்றும் ஹஸ்ரஜின் மக்கள் மக்களும் பைஅத் செய்தனர். எந்த அளவுக்கு ஆர்வம் இருந்தென்றால் அந்த சந்தர்ப்பத்தில் சஅது அவர்கள் நோயுற்றிருந்தார்கள். எழும்ப முடியாத நிலையில் இருந்தார்கள். அவர்கள் தவழ்ந்து சென்றவாறு பைஅத் செய்தார்கள். இறுதியாக சஅது மற்றும் ஹஸ்ரத் அலி அவர்களைத் தவிர மற்ற அனைவரும் பைஅத் செய்தனர். எதுவரை என்றால் சஅது அவர்களின் மகனும் கூட பைஅத் செய்து விட்டார்.

ஹஸ்ரத் அலி அவர்கள் சில நாட்களுக்குப் பிறகு பைஅத் செய்தார்கள். அறிவிப்புகளில் மூன்று நாட்கள் என்றும், சில அறிவிப்புகளில் 6 மாதங்களுக்குப் பிறகு பைஅத் செய்ததாக வருகிறது. ஆறு மாத அறிவிப்பைப் பொறுத்தவரை இவ்வாறு கூறப்பட்டுள்ளது. அதாவது அன்னார் ஹஸ்ரத் ஃபாத்திமா அவர்களை கவனிக்கும் பணியில் இருந்ததால் ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களிடம்ட பைஅத் செய்ய முடியவில்லை. இறுதியாக அன்னார் பைஅத் செய்ய அன்னார் வந்தபோது ஃபாத்திமா உடல் நலமில்லாமல் இருக்கின்றார்கள். எனவே நான் பைஅத் செய்வதில் காலதாமதம் ஆகிவிட்டது என்று மன்னிப்பு கோரினார்கள்.

(கிலாஃபத்தே ராஷிதா பக்கம் 39–42 அன்வாருல் உலூம் தொகுதி 15)

எவ்வாறிருப்பினும் அப்போது அனைவரும் பைஅத் செய்தனர்.

ஹஸ்ரத் உர்வா பின் சுபைர் அவர்கள் கூறுகின்றார்கள்: அல்லாஹ் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு மரணத்தைக் கொடுத்த போது மக்கள் அழுதனர். அவர்கள், அல்லாஹ்வின் மீது ஆணையாக! பெருமானார் (ஸல்) அவர்களுக்கு முன்பாகவே நாங்கள் மரணிக்க வேண்டும் என்று நாங்கள் விரும்பினோம். ஏனென்றால் அன்னாருக்குப் பிறகு குழப்பத்தில் நாங்கள் விழ விரும்பவில்லை என்று கூறினர்.

நான் ஹஸ்ரத் மஅன் அவர்களைப் எடுத்துக் கூறி வருகின்றேன். அந்த சஹாபி கூறுகிறார்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! மக்கள் அனைவரும் நாம் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு முன்பாகவே மரணித்து விட வேண்டும் என்று கூறுகின்றனர். ஆனால் நான் அன்னாருக்கு முன்பாகவே மரணிக்க விரும்பவில்லை. ஏனென்றால், அன்னார் உயிரோடு இருக்கும்போது அன்னாரை எவ்வாறு நான் உண்மைப்படுத்தினேனோ அவ்வாறே அன்னார் மரணித்த பிறகும் கூட அன்னாரை நான் உண்மைப்படுத்த ண்டும்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 244,255 மஅன் பின் அதீ – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது)

எவ்வாறு அன்னாரை நான் ஏற்றுக் கொண்டேனோ அன்னாருடைய மரணத்திற்குப் பிறகு அன்னார் முன்னறிவித்த அமைப்பு அதாவது கிலஃபாத்தே ராஷிதா நிறுவப்பட்டு விட்டது. நயவஞ்சகர்கள் மற்றும் மார்க்கத்தை விட்டு வெளியேறியவர்களின் வலையில் சிக்கிக் கொள்ளாதீர்கள் என்று நான் கூறுவேன் என்று அன்னார் கூறினார்கள்.

ஆக இந்த ஈமானின் தரத்தைதான் ஒவ்வொரு அஹ்மதியும் நிலைநாட்ட வேண்டும். ஒரு அறிவிப்பிற்கேற்ப ஹஸ்ரத் மஅன் அவர்கள் ஹஸ்ரத் காலித் பின் வலீத் அவர்களுடன் நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு மார்க்கத்தை விட்டு விலகிச் சென்றவர்கள் மற்றும் கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக நடைபெற்ற போரில் பங்கு பெற்றதாக வந்துள்ளது.

(அல் அஸாபா ஃபீ தமீஸுல் சஹாபா தொகுதி 6 பக்கம் 151 மஅன் பின் அதீ – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் மஅன் மற்றும் ஹஸ்ரத் ஸைது பின் கத்தாப் ஆகியோருக்கிடையே சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள். இந்த இரண்டு சஹாபாக்களும் ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் நடத்ந யமாமா போரில் ஹிஜ்ரி 12 வது ஆண்டில் ஷஹீதானார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅது தொகுதி 6 பக்கம் 151 மஅன் பின் அதீ – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அல்லாஹ் ஒவ்வொரு அஹ்மதிக்கும் நபித்துவத்தின் அந்தஸ்தை புரிந்து கொள்வதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக. மேலும் கிலாஃத்துடன் நன்றியுணர்வுடனும், பற்றுணர்வுடனும் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக.

**கிளை அமைப்புகளின் தேசிய இஜ்திமா**

**ஸய்யிதுனா ஹஸ்ரத் அக்தஸ் அமீருல் முஃமினீன் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மிகுந்த பரிவுடன் இந்தியாவின் கிளை அமைப்புகளின் (மஜ்லிஸ் அன்ஸாதுல்லாஹ், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, லஜ்னா இமாயில்லாஹ்) தேசிய இஜ்திமாக்களை 18,19,20 அக்டோபர் 2019 (வெள்ளி, சனி, ஞாயிறு) ஆகிய கிழமைகளில் நடத்துவதற்காக ஒப்புதல் வழங்கியுள்ளார்கள். கிளை அமைப்பின் உறுப்பினர்கள் காதியான் தாருல் அமானின் ஆன்மீகச் சூழலில் நடைபெறும் இந்த இஜ்திமாக்களில் பங்கு பெற இப்போதிருந்தே தயாராகுங்கள் என்று கேட்டுக் கொள்கின்றோம்.**

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

செய்வதற்காக அந்த ஒளியை இழுக்கின்றது. அந்தத் தேவைக்கு ஏற்றாற்போல் நபித்துவத்தின் தொடராக ஆரம்பமானது. மேலும் திருக்குர்ஆனுடைய காலகட்டத்தை அடைந்ததும் அது முழுமை பெற்று விட்டது. தற்போது அனைத்துப் பணிகளும் முழுமையடைந்து விட்டது.

இதன் மூலம் அன்னார் அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காத்தமுன் நபிய்யீனாக விளங்குகிறார்கள் என்பதை அனைவரும் ஒப்புக் கொள்ள வேண்டும் என்பது தெளிவாகி விட்டது. தற்போது மிகப்பெரிய மற்றும் தெளிவான வேறுபாடு (பைபிள் மற்றும் திருக்குர்ஆன் இரண்டிற்கும் உள்ள வேறுபாடு) என்னவென்றால், திருக்குர்ஆன் என்ன சான்றுகளை எடுத்து வைத்துள்ளதோ அதை பைபிளிள் தொடக்கூட இல்லை என்பதே ஆகும்.

### திருக்குர்ஆன் மற்றும் தவ்ராத்தின் போதனைகளிலுள்ள இரண்டாவது வேறுபாடு

இரண்டாவது வேறுபாடு என்னவென்றால், தவ்ராத் இஸ்ரவேல் கோத்திரத்திற்காக மட்டுமே வந்துள்ளது. பிற சமுதாயத்துடன் எந்தவொரு தொடர்பும், பந்தமும் அதற்கு கிடையாது. இதன் காரணமாகத்தான் சான்றுகள் மற்றும் அத்தாட்சிகள் மீது தவ்ராத் அழுத்தம் கொடுக்கவில்லை. ஏனென்றால் தவ்ராத் எந்த ஒரு நாத்தீக, தத்துவவாதிகள் மற்றும பிரம்ம சமுதாயங்களை தன்னுடைய போதனைகளில் கருத்தில் கொள்ளவே இல்லை. திருக்குர்ஆன் அனைத்து சமுதாயங்களையும், பிரிவுகளையும் கருத்தில் கொண்டிருந்தது. மேலும் அனைத்து தேவைகளும் அதன் வரை சென்று முடிவு பெற்றுள்ளது.

அதனால்தான் திருக்குர்ஆன் கொள்கைகள் மற்றும் செயல்படக்கூடிய கட்டளைகளை ஆதாரமாக எடுத்து வைத்துள்ளது. ஆகவே தான் திருக்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது:

قُلْ لِّلْمُؤْمِنِيْنَ يَغُضُّوْا مِنْ اَبْصَارِهِمْ وَ يَحْفَظُوْا فُرُوْجَهُمْ

நீர் நம்பிக்கை கொண்ட ஆண்களிடம் அவர்கள் தங்கள் பார்வைகளைக் கீழ்நோக்கி வைத்திருக்குமாறும், தங்கள் மறைவான உறுப்புகளைப் பாதுகாத்துக் கொள்ளுமாறும் கூறுவீராக. (24:31)

நம்பிக்கை கொண்டவர்களிடம் இவ்வாறு கூறுங்கள். திரையில் உள்ள எந்த ஒரு பொருளையும் கண்ணைப் பிளந்து பார்க்க வேண்டாம். மேலும் அனைத்து விதமான துவாரங்களையும் பாதுகாத்துக் கொள்ளுங்கள். மனிதன் பார்வையை தாழ்த்திக் கொள்வது மிகவும் அவசியமாகும். விலக்கப்பட்ட பெண்களைப் பார்ப்பதன் மூலம் குழப்பத்தில் வீழ்வதிலிருந்து அவன் விலகி இருப்பான்.

காதும் ஃபுரூஜ் என்ற சொல்லில் அடங்கும். அதாவது கட்டுக் கதைகளை கேட்டு குழப்பத்தில் அழ்ந்து விடுகின்றார்கள். அதனால்தான் இறைவன் பொதுவாக இங்கே அனைத்து விதமான துவாரங்களையும் பாதுகாத்துக் கொள்ளுங்கள். மாறாக, முற்றிலும் அடைத்து வையுங்கள் என்று கூறியுள்ளான்.

ذٰلِكَ اَزْكٰى لَهُمْ இது உங்களுக்கு மிகத் தூய்மையானதாகும் (24:31)

மேலும் இந்த நடைமுறைதான் உயர்தர நல்லொழுக்கத்தை தன்னகத்தே கொண்டுள்ளது. மேலும் இந்த பண்பு இருக்கும் வரை தீய நடத்தை உடையவர்கள் என கருதப்பட மாட்டீர்கள்.

### திருக்குர்ஆன் சான்றுகள் மற்றும் அத்தாட்சிகளை சுயமே எடுத்து வைக்கின்றது

தவ்ராத் தன்னுடைய சொற்களிலும் கருத்துக்களிலும் கூறப்பட்டுள்ள அந்த ஒரு கருத்தை திருக்குர்ஆன் எவ்வாறு விரிவாகவும், தெளிவாகவும், விளக்கமாகவும் வலுவான சான்றுகள் மற்றும் அத்தாட்சிகளுடன் எடுத்துக் கூறியுள்ளது என்பதை பாருங்கள். அது தன்னை பின்பற்றுபவர்களை மற்றவர்களிடத்தில் எந்த ஒரு தேவையையும் எதிர்பார்ப்பையும் பெறக் கூடியவர்களாக ஆக்குவதில்லை.

இதுவே திருக்குர்ஆனின் அற்புதம் ஆகும். திருக்குர்ஆன் ஆதாரங்களுடன் கட்டளைகளை சமர்ப்பித்துள்ளது. மேலும் ஒவ்வொரு கட்டளைகளுக்கும் தனித்தனியாக சான்றுகளையும் கொடுத்துள்ளது. ஆக இதுவே தவ்ராத் மற்றும் திருக்குர்ஆனுக்கு இடையில் உள்ள மிகப்பெரிய வேறுபாடாகும்.

முதலில் கூறப்பட்ட தவ்ராத்தில் ஆதாரங்கள் எதுவும் இல்லை. வாதத்திற்கான ஆதாரத்தை சுயமே தேட வேண்டியதாக இருக்கின்றது. இதற்குக் பிறகு இறங்கிய திருக்குர்ஆன் தன்னுடைய வாதத்தை அனைத்து விதமான ஆதாரத்துடன் வலுப்படுத்திய பின்னர் சம்ர்ப்பிக்கின்றது. மேலும் இறைவனின் கட்டளைகளை பலவந்தமாக ஏற்றுக் கொள்ள வைக்கவில்லை. மாறாக, மனிதனுடைய நாவிலிருந்து அவர்கள் சுயமே ஒப்புக் கொண்டதற்கான மகிழ்ச்சியை வெளிப்படுத்துகிறது.

பலவந்தமாகவோ, நிர்பந்தமாகவோ அல்ல. மாறாக, தன்னுடைய நாவிலிருந்து அழகிய சான்றுகள் மற்றும் இயல்பான போதனையைக் கொண்டு ஏற்றுக் கொள்ள வைத்துள்ளது. தவ்ராத் குறிப்பிட்ட கூட்டத்திற்காக வந்துள்ளது. ஆனால் திருக்குர்ஆன் கியாமத் வரை பிறக்கின்ற அனைத்து மக்களுக்காகவும் வந்துள்ளது.

இவ்வாறிருக்க திருக்குர்ஆன் மற்றும் தவ்ராத் இரண்டும் எவ்வாறு ஒன்றாக முடியும் எனக் கூறுங்கள். மேலும் இப்படிப்பட்ட நிலையில் தவ்ராத்தின் போதனை இருக்கின்ற நிலையில் திருக்குர்ஆனின் அவசியம் எவ்வாறு இல்லாமல் போய்விடும். நீங்கள் விபச்சாரம் செய்யாதீர்கள் என்று திருக்குர்ஆன் கூறும்போது அனைத்து மனித இனத்தையும் குறித்து அது கூறுகின்றது. ஆனால் இதே வார்த்தையை பைபிள் கூறும்போது அதனுடைய நோக்கம் ஒரு குறிப்பிட்ட சமுதாயமாகிய இஸ்ரவேல் சமுதாயமாக மட்டுமே இருக்கின்றது.

இதிலிருந்தும் பைபிளின் போதனை ஒரு குறிப்பிட்ட எல்லைக்குட்பட்ட மற்றும் விரிவான போதனையாக இல்லை என்பதை தொலைநோக்குப் பார்வை மற்றும் இறையச்சமுடைய உள்ளம் இருந்தால் இதனைத் தெளிவாக உணர முடியும்.

### ஆன்மீக மற்றும் பௌதீக அற்புதங்கள்

தவ்ராத் மற்றும் திருக்குர்ஆன் ஆகிய இரண்டிற்கும் உள்ள மிகப்பெரிய ஒரு வேறுபாடு என்னவென்றால், திருக்குர்ஆன் அனைத்து விதமான ஆன்மீக மற்றும் பௌதீக அற்புதங்களை தன்னகத்தே கொண்டுள்ளது. உதாரணமாக சந்திரன் பிளப்பது போன்ற அற்புதம் பௌதீக அற்புதங்களில் ஒன்றாகும்.

### இயற்கைச் சட்ட திட்டத்திற்கு எந்த ஒரு கட்டுப்பாட்டையும், வரையறையையும் விதிக்க முடியாது

சில அறிவற்றவர்கள் சந்திரன் பிளக்கப்படுதல் தொடர்பான அற்புதத்தை இயற்கைச் சட்டம் என்று மறைவிற்கு பின்னால் ஒளிந்து கொண்டு அதை ஆட்சேபனை செய்கின்றனர். ஆனால் அவர்களுக்கு எல்லாம் வல்ல இறைவனின் இயற்கைச் சட்ட திட்டங்களின் வரையறையை கணிக்க முடியாது என்பது கூட தெரியவில்லை. சில சமயம் அவர்களின் நாவுகளிலிருந்து இறைவன் பேசுகின்றான். மற்றொரு சமயம் அவருடைய உள்ளம் ஆன்மா எல்லாம் வல்ல இறைவனின் மகத்துவத்தையும்

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly **BADAR** Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 4 Thursday 26 Sep 2019 Issue No. 39

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

படைப்பினங்களுக்குக்கெல்லாம் அப்பாற்பட்ட இயல்பான நிலையைப் பார்த்து சஜ்தாவில் (சிரம்பணிந்து) விழுகின்றது.

அவனுக்கு எந்த ஒரு கட்டுப்பாடும் விதிவிலக்கும் இல்லை என்பதை மறந்து விடுகின்றனர். இதுவே இறைவனின் இருப்பு மற்றும் தயாள குணம் என்றும், மேலும் அவனுடைய இயற்கை சட்டங்கள் மற்றும் சக்திகள் நம்முடைய சிந்தனைகள் மற்றும் கணிப்பின் எல்லைக்கு உட்பட்டதாக இருக்குமேயானால் பிறகு துஆவிற்கான என்ன அவசியம் இருக்கின்றது? ஆனால் அவ்வாறு இல்லை;

நான் உங்களுக்கு கூறுகின்றேன். அதாவது, எல்லாம் வல்ல அல்லாஹ்வின் ஆற்றல்கள் மற்றும் அவனுடைய திட்டங்கள் எவராலும் கணக்கிட முடியாது. எந்த மனிதனாவது அவ்வாறு செய்வதாக வாதம் வாதம் செய்தால் அவர் இறை மறுப்பாளர் ஆவார். ஆனால் எல்லாம் வல்ல அல்லாஹ் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குட்பட்டவன் அல்ல என்றும் அவன் அனைத்து இயற்கை சட்டங்களுக்கும் அதிபதி ஆவான் என்றும் நன்கு புரிந்த பிறகும் சந்திரன் பிளக்கப்பட்ட அற்புதத்தை இயற்கைச் சட்டத்திற்கு எதிரானது என்று கூறக்கூடிய அந்த நபரின் நிலை அந்தோ மிகவும் பரிதாபமானது. அப்படிப்பட்ட மனிதர் நன்கு சிந்திக்கக்கூடிய மற்றும் தொலைநோக்குப் பார்வையுடையவராக இருக்க மாட்டார் என்பதை புரிந்து கொள்ளுங்கள்.

நன்றாக நினைவில் கொள்ளுங்கள். இயற்கைச் சட்டத்தை எப்போதுமே நீங்கள் கணித்து விடாதீர்கள். அதாவது அவனுடைய எல்லையை வரையறுக்காதீர்கள். இறைவனின் இருப்பு மற்றும் இறைத்தன்மைக்கான அனைத்து சாராம்சமும் இதுவே ஆகும். அவ்வாறு இல்லையென்றால் அனைத்தும் வீணாகி விடும். மனிதனை இறை அடியான் என்ற அந்தஸ்தில் இருந்து வீழ்த்தக்கூடிய இப்படிப்பட்ட தைரியத்தையும் துணிச்சலையும் மேற்கொள்ளக் கூடாது. அவ்வாறு செய்தால் அதனுடைய விளைவு அழிவுதான்.

இறைவனின் சட்டங்களை ஒரு குறிப்பிட்ட வட்டத்திற்குள் வரையரைப்படுத்துதல், ஒரு கட்டுக்கோப்பில் அடக்குதல் ஆகிய இவ்வாறான முட்டாள்தனமான மற்றும் அறிவீனமான செயல்கள் எந்த ஒரு இறைநம்பிக்கையாளரிடமிருந்தும் வெளிப்படக்கூடிய செயலாக இருக்க முடியாது.

இமாம் ஃபக்ருத்தீன் ராஸி அவர்களின் இந்தக் கூற்று மிகவும் சரியானதாகும். அதாவது எவர் எல்லாம் வல்ல இறைவனை அறிவின் அளவுகோலைக் கொண்டு கணக்கிட நினைப்பாரோ அவர் மூடர் ஆவார்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 74–76 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைப் பற்றி அறிந்து கொள்ள:–
www.alislam.org

Love for All Hatred for None
எல்லோரிடத்தும் அன்பு; எவரிடத்தும் இல்லை வெறுப்பு

**நபிமொழி**

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

நபிமார்களுக்கு இடையே உள்ள தொடர்பு பால்குடி சகோதரர்களைப் போன்றதாகும். அவர்களின் தந்தை ஒருவரே. தாய்மார்கள் பலர் ஆவர். மக்களில் ஹஸ்ரத் ஈஸப்னு மர்யம் அவர்களுடன் எனக்கு எல்லாரையும் விட மிக நெருங்கிய தொடர்பு இருக்கின்றது. ஏனென்றால் எனக்கும் அவருக்கும் மத்தியில் எந்த நபியும் இல்லை. (இந்த ஆன்மீக நெருக்கத்தின் காரணமாக எனக்கு ஒப்பாக இருக்கும் அவர் கண்டிப்பாக இறங்குவார்.)

அவரை நீங்கள் காணும் போது அவரது அங்க அடையாளங்கள் மூலமாக அவர்களை இனங்கண்டு கொள்ளுங்கள். அவர் நடுத்தர உயரத்தை உடையவராக இருப்பார். சிவப்பும் வெள்ளையும் கலந்த நிறத்தை உடையவராவார். நேரான முடியை உடையவராவார். அவருடைய தலையிலிருந்து அவர் தண்ணீரை பயன்படுத்தாத நிலையில் தண்ணிர்த் துளிகள் விழுந்து கொண்டிருக்கும்.

அதாவது அவரது தலை முடியின் ஒளியின் காரணமாக அது ஈரமுள்ளதைப் போன்று தோன்றும். அவர்கள் தோன்றி சிலுவையை முறிப்பார்கள். அதாவது சிலுவை கொள்கையை பொய் என்று நிரூபிப்பார்கள். பன்றியைக் கொல்வார்கள்.

அதாவது தீய ஆன்மாவைக் கொண்ட மக்களின் அழிவிற்கு காரணமாக இருப்பார்கள். அவர்கள் மூலமாக சிலுவைக் கொள்கை மிகைத்திருப்பது தடுத்து நிறுத்தப்படும். பன்றியின் இயல்பையுள்ள மக்கள் அழிக்கப்படுவர். ஜிஸ்யா வரி நிறுத்தப்படும். அதாவது அந்த காலம் மார்க்கப் போர்கள் முடிவுக்கு வந்த விட்ட காலமாக இருக்கும். அந்த காலத்தில் இஸ்லாத்தைத் தவிர ஏனைய மதங்களை அவற்றின் ஆன்மீகத்தின் அடிப்படையிலும் அவற்றின் எழுச்சியின் அடிப்படையிலும் முற்றிலுமாக அல்லாஹ் அழித்து விடுவான்.

அவர் தஜ்ஜாலை அழித்து விடுவார். அவரது காலகட்டம் எந்த அளவு அமைதியான காலகட்டமாக இருக்குமென்றால் ஒட்டகம் சிங்கத்துடனும், சிறுத்தை பசுக்களுடனும், ஓநாய் ஆடுகளுடனும் ஒன்றாக சேர்ந்து மேயும். சிறுவர்களும் பெரிய வயதுடைய இளைஞர்களும் பாம்புகளுடன் விளையாடுவர். அல்லாஹ்வின் கட்டளைகளுக்கேற்ப எவ்வளவு காலம் மஸீஹ் உலகில் இருக்க வேண்டும் என்று அல்லாஹ் விரும்புவானோ அவ்வளவு காலம் மஸீஹ் உலகில் இருப்பார். பிறகு அவர் வஃபாத் ஆகி விடுவார். முஸ்லிம்கள் அவரது ஜனாஸா தொழுகையில் கலந்து கொள்வர். பிறகு அவர்களை அடக்கம் செய்வர்.

(ஆதாரம் : அபுதாவூது கிதாபுல் மலாஹிம் பாப் ஹுரூஜுத் தஜ்ஜால் பக்கம் 594, முஸ்னத் அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 2 பக்கம் 437, ஹதீக்கத்துஸ் ஸாலிஹீன் ஹதீஸ் எண் 945)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: பயனற்று இருத்தல், சோம்பேறித்தனம், பொய் பேசுதல் போன்ற தீய பழக்கங்கள் இளைஞர்களிடம் உருவாகி விட்டால் அந்த சமுதாயம் இன்று இல்லை என்றாலும் நாளை நிச்சயமாக அழிந்து விடும்.

(மஷ்அலே ராஹ், தொகுதி 1 பக்கம் 16)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad